திராவிடத் தமிழர்களின்
பண்டைக்கால வரலாறு.

★

என் ஆசிரியர்:

பேரறிஞர், சொ. மறைமலையடிகளார்க்கு
இந்நூல் நினைவு சின்னமாகும்

★

இந்நூல்
தியாகி,
வெ. துரையனார் அடிகளால்
இயற்றப்பட்டது.

★

திருக்குடந்தை
India Machinery Stores,
KUMBAKONAM
1967

பக்கம் எண்

மேற்கூறப்பட்ட எண் வகைக் கொள்கையென்பன இறைவரின் திருவருள்கொண்டு அடியேனல் இயற்றப்பட்ட "திருவியன் மதியம்" என்னும் நூலிலே காணக்கிடக்கின்றன. அந்நூலிலே நான்கு திருநெறிகள் உள. அவை வருமாறு.

1 அறத்துத்திருநெறிகள்
2 வாழ்க்கைத் திருநெறிகள்
3 நன்னியந்திருநெறிகள்
4 மூண்மை (மூவுண்மைத்) திருநெறிகள்

என்பனவாகும்

அறத்துத் திருநெறியின் பால்வகைகளையும் அவற்றின் இயல் வகைகளையும 74, 75, 76 77 பக்கங்களில் காண்க.

வாழ்க்கைத் திருநெறியின் பால்வகைகளையும் அவற்றின் இயல் வகைகளையும் 77 78, 79 பக்கங்களில் காண்க.

நன்னியந் திருநெறியின் பால்வகைகளையும் அவற்றின் இயல் வகைகளையும 79, 80, 81 பக்கங்களில் காண்க.

மூண்மைத் (மூவுண்மை) திருநெறியின் பால் வகைகளையும, அவற்றின் இயல் வகைகளைம் 81, 82, 83 பக்கங்களில் காண்க.

முன்னுரை

திராவிடத் தமிழர்களின் பண்டைக்கால வரலாறு.

1912-ம் ஆண்டு வரைக்கும் அதாவது 52 ஆண்டிற்கு முன் வரைக்கும் திராவிடம் தமிழம் என்பவற்றின் வரலாறு அறியாதிருந்த நான், சென்னையிலிருந்த இரு பேரறிஞர்களால் ஓர் அளவு அறியலுற்றேன். இற்றை காறும் என் ஆராய்ச்சியால் கிடைத்த வரலாற்றை இந்தியாவிலும் அயல் நாட்டிலும் உள்ள திராவிடத் தமிழர்கள் அறிந்து முன்னேற்றம் அடையும் பொருட்டு இந்நூலை இயற்றலுற்றேன். நிற்க, இந்நூலைப் படிப்போர் எனது வரலாற்றையும் சிறிது அறிந்தால் தான் எனது ஆராய்ச்சியில் நம்பிக்கை உண்டாகும். என் வரலாறு வருமாறு:

தென்னப்பிரிக்காவைச் சேர்ந்த ஜோஹனஸ்பர்க்கிலே (Johanesberg) நகரத்திலே 1908-ஆம் ஆண்டிலே அப்போது எனக்கு வயது 17-ஆம், மகாத்மாகாந்தியின் கட்டளைப்படி தென்னாஃபிரிக்கா அரசாங்கத்தின் கொடிய சட்டத்தை (The Asiatic Emigration act) என்பதை எதிர்த்துச் சட்டம் மறுப்பு இயக்கம் (The Passive Resistant movement) நான் செய்ததால் அந்தநாட்டு நீதிபதி வெர்னேன் (Vernon) என்பவரால் நான் 6 மாதம் கடுங்காவல் தண்டனை கொடுத்துத் தண்டிக்கப்பட்டேன். 5 மைலுக்கு அப்பால் Dipkloof என்ற சிறைச்சாலையிலே

திருவாளர்கள் மணிலால் காந்தி, ஜோசப் ராயப்பன், B. A. Cambridge, C K. நாயுடு முதலானவர்களோடு சேர்க்கப்பட்டேன். நான் விடுதலையடைந்த பிறகு, 1913-ம் ஆண்டிலே நானும் என் அன்னையாரும் அந்நாட்டினின்று புறப்பட்டுச் சென்னைக்கு வந்து பல்லாவரத்தில் பேராசிரியர் மறைமலையடிகளாரிடத்தில் தமிழ்க்கலை கற்கத்தொடங்கினேன். சிறிது காலம் பிறகு, அடிகளாரின் அன்னையார் காலமானபோது நான் நெருப்புச்சட்டி தூக்கும் வாய்ப்பு கிடைத்தது. பிறகு அடிகளாரால் திராவிடத் தமிழர்களின் வரலாற்றின் பெருமையைச் சிறிது அறியலுற்றேன். அப்போது ஒரு நாள் அடிகளாரின் அலுவலாகச் சைதாப் பேட்டையிலிருந்த பேராசிரியர் மாகறல் கார்த்திகேய முதலியாரின் வீட்டிற்குப் போனேன். அவர் நான் போன அலுவலை முடித்துவிட்டு அவரியற்றிய "தமிழ்மொழி நூல்" (Philology) ஒன்றை எனக்கு அன்பளித்தார் நான் நட்டாலைச் சேர்ந்த டர்பனிலுள்ள (Durban) தமிழ், ஆங்கிலம், இந்தி அறிந்த அறிஞர் விருத்தாசலம் பிள்ளையின் விலாசத்தைச் சொல்லி அவர்க்கு அந்நூல் ஒன்று அனுப்பச் சொன்னேன். அவர் அங்ஙனமே ஒரு நூல் அனுப்பினர். அதற்கு C. V. Pillai ஒரு பவுன் மா. கார்த்திகேயனுருக்கு அனுப்பினர். நிற்க, அம்மொழி நூலால் திராவிடத் தமிழர்களின் வரலாற்றிலே எனக்கு மிகுந்த கவனம் உண்டாயது. பிறகு, தமிழ் ஆங்கில நூல்களாலும், என் சொந்த ஆராய்ச்சியாலும் திராவிடத் தமிழர்களின் வரலாற்றை எழுதலுற்றேன். இம்முயற்சியானது சம்பாதிப்பதற்கு அன்று, உலகிலுள்ள திராவிடத் தமிழர்கள் புது வாழ்க்கையும், முன்னேற்றமும், பகுத்தறிவும், உரிமை வாழ்க்கையும் அடையும்பொருட்டே இயற்றலுற்றேன்.

நிற்க, 1914-ஆம் ஆண்டிலே என் உறவினர்களின் அண்மையிலுள்ள சுவாமிமலை என்னும் ஊரிலே நெல்

இயந்திரசாலை வைத்துத் தொழில் நடத்தினேன். அந்தக் காலத்திலே சுதேசி இயக்கம், மதுவிலக்கு இயக்கம், கிலாஃபத்து இயக்கம் முதலிய இயக்கங்களுக்குத் தொண்டு புரிந்தேன். சிலஆண்டிற்குப் பிறகு நான் கும்பகோணத்திற் குப்போய்க் குடியேறிய பிறகு 1930ஆம் ஆண்டிலே என் சம்பந்தி சர்தார் வேதரெத்தினம் பிள்ளையின் ஊராகிய வேதாரணியத்திற்குப் போய் திரு G இராமச்சந்திரன் தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகம் செய்து, அதனால் ஓர் ஆண்டுக்குத் தண்டிக்கப் ட்டுக் கடலூர், வேலூர் சிறைச் சாலைகளில் வைக்கப்பட்டேன். அப்போது திருவாளர்கள் கு. காமராசர், C. இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் பட்டாபி சீதாராமையா முதலானவர்கள் அச்சிறையில் இருந்தார்கள். மறுபடியும் 1932-ல் மகாத்மா காந்தி அவர்களின் கட்டளைப்படி நான் சட்ட மறுப்பு இயக்கம் செய்ததால் $2\frac{1}{2}$ (இரண்டரை) ஆண்டு கும்பகோணம் கலெக்டர் கோமான் என்பவரால் தண்டிக்கப்பட்டுத் திருச்சிராப்பள்ளிச் சிறையிலும், மதுரைச் சிறையிலும் வைக்கப்பட்டேன். அப்போது என் வாழ்க்கைத் துணைவி யார் துளவம்பாள் ஆய்ச்சியர் காலமானார். அந்தக்காலத்தில் என் குடும்பம் நொடிப்பு அடைந்தது. பிறகு சிலகாலம் நான் விடுதலையடைந்துவந்து முயற்சித்து இரும்பு வார்ப்புத் தொழிற்சாலையும் (The National Industrial Works and Iron foundry) யும் சிறிதுகாலம் பிறகு "India Machinery Stores" என்பதையும் கும்பகோணத்தில் ஏற்படுத்தி நடத்துகின்றேன். என் புதல்வர்கள் திருச்சிற்றம்பலம், அருள்நந்திசிவம், திருநாவலர் என்பவர்களின் முயற்சியால் எங்களின் குடும்ப நிலைமை சற்று நன்னிலை அடைந்துள்ளது ஆதலால், இத்திராவிடத் தமிழர்களின் வரலாற்றைத் தமிழ் உலகம் அறிந்து உய்யு மாறு இந்நூலை அச்சிட்டு வழங்குகின்றேன். அன்றியும்:

புத்தர்கள், ஜைனர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், ஸ்மார்த்தர்கள். ஐயங்கார்கள், மத்துவர்கள், பாரசிகர்கள் ஆகியவர்களுக்கு வாழ்க்கைக் கொள்கைகள் உண்டாயிருக்கின்றன. அவர்கள் தத்தம் கொள்கைப்படி வாழ்க்கை நடத்துகின்றமையால் அவர்களுடைய வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைகின்றுர்கள். அன்றியும், அவர்களின் வாழ்க்கையிலே சகோதரத்துவம், சமத்துவம், சுதந்தரத்துவம் முதலிய நல்ல பழக்கவழக்கங்கள் உண்டாயிருக்கின்றன. 2000 ஆண்டிற்கு முன்னே திருக்குறளிலுள்ள கொள்கைப்படி திராவிடத் தமிழர்களுக்கு வாழ்க்கைகொள்கை இருந்தது. அது பிற்காலத்தில் பார்ப்பனர்களின் புராணக்கதையால் மாற்றப்பட்டு பௌராணிக இந்துமதம் ஆகியது. இந்த இந்து மதம் தமிழ், மலையாளம், தெலுங்கு மைசூர், மராட்டியம், கூர்ஜரம் ஆகிய பஞ்ச திராவிட நாடுகளிலும் பரவி, அவற்றிற்கு அப்பால் இந்தியா முழுமையும், மற்ற தீவுகளிலும் பரவியது.

அதனால் பல அயல்நாட்டார்களின் படையெடுப்பினுல் இந்தியர்களாகிய நாம் தோல்வியுற்ருேம், அதனல் பல ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்தோம் ஆயினும், இந்திய தேசிய காங்கிரஸ் கழகத்தின் பெருந்தியாகத்திஞல் நம் மக்கள் அடிமையிலிருந்து விடுதலையடைந்து குடியரசு ஆட்சி ஏற்படுத்தியிருக்கின்ருேம். ஆயினும், நம்மை அடிமை படுத்திய பழைய மூடப் பழக்கவழக்கங்களையும், மூட வாழ்க்கைக் கொள்கைகளையும் ஒழித்துவிட்டு நம் குடியரசுக்கு ஏற்ற நல்ல வாழ்க்கைக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு நாம் வாழ்தல் வேண்டும். அத்தகைய வாழ்க்கைக் கொள்கைகள் எம்மால்

இயற்றப்பட்ட "திருவியன் மதியம்" என்ற நூலிலே கூறப்பட்டிருக்கின்றன. எந்த மனிதரும் இதன் கொள்கைப் படி வாழ்க்கை நடத்தினால் இவ்வுலகிலே துன்பம் இன்றி, கவலையின்றி, முன்னேற்றமான நல்வாழ்க்கை வாழ்வார்கள் என்பது திண்ணமே. எந்தத் துறையிலும் முன்னேற்றம் அடைவார்கள்,

திருவியன் மதியம் என்பதற்குப் பொருள் வருமாறு காண்க:

திரு - தெய்வத்தன்மையுள்ள. இயல் – இயற்கையான, வியன் - மேன்மையான பெரிதான, மதி-பகுத்தறிவுடைய, அம் – தூய்மையான என்பதாம். அதாவது, தெய்வத்தன்மை பொருந்தியதும் இயற்கையும் மேன்மையுமுள்ள பகுத்தறி வான வாழ்க்கைக் கொள்கையாம்.

என் வாழ்க்கை வரலாறு முடிவுற்றது.

எம்மால் இயற்றப்பட்ட "திருவியன் மதியம்" என்ற நூலின் பொருள்விளக்கம் இந்த நூலின் ஈற்றிலே கண்டு ஆராய்ச்சி செய்ம்மின்.

உங்கள் உண்மையுள்ள.

வெ. துரையனார் அடிகள்.
தேசிய இரும்பு வார்ப்புத் தொழிற்சாலை,
தபால் பெட்டி எண் 17, ஆனைக்காரபாளையம்.
கும்பகோணம்

India Machinery Store,
தபால் பெட்டி எண் 6 பொற்றாமரை தென்கரை
கும்பகோணம்.

தமிழ் என்பது மொழியின் பெயராகும். (இனிமையான மொழி) திராவிடர் என்பது இனத்தின் பெயராகும். திரு – ஆர்; என்பது மேன்மை, தெய்வத்தன்மை பொருந்தியது. விடலை என்பது ஆண் மகன், பாலைவனத் தலைவன், திராவிடம் என்பது பஞ்ச திராவிடநாடாடு முதலியனவாம். பஞ்ச திராவிடநாடாவன: தமிழ்நாடு, கேரளநாடு, ஆந்திர நாடு, கூர்ஜர நாடு [குஜராத்து) மைசூர்நாடு, மராட்டியநாடு ஆகியனவாம். வையகத்திலே முதலில் எந்நாட்டில் மாந்தர்கள் தோன்றினர் என்பது ஆராயின் குளிர்,வெப்பம், நிலவளம், நீர்வளம். பயிர்வளம் உடைவளம், தொழில் வளம், கலைவளம் முதலிய வாழ்க்கைக்குரிய எல்லாவளமும் அமைந்ததும் உலகில் நடுமையானதுமான குமரி கண்டத்து நன்னாட்டிலே தோன்றினர் என்பது வரலாற்றின் உண்மையாகும். இக்கொள்கை பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்களுக்கும் உடன்பாடாகும். பேரறிஞர், ஹெக்கல், என்பவரின் கொள்கைமாகும்.

அந்நாட்டைப்பற்றிய வரலாறு:

இந்தியாவின் தென்கோடியான கன்னியாகுமரிக் கரையினின்று தெற்கே மலைகாசி (Madagascar) பெருந்திவு வரையிலும், இந்தியாவின் கிழக்கரையினின்று ஆஸ்திரேலியா கண்டம் வரைக்கும் பரவியதும், பெருவளநாடு, தென்பாலிநாடு, குமரியாறு, பஃறுளியாறு முதலிய நாற்பத்தொன்பது நாடும், மேற்கூறப்பட்ட மலைகாசியும், மோரிசுபோர்னியோ, சாவகம் (Java), சுமத்திரா, பாலித்தீவு,இலங்கை, இந்தோனேசியா, மலேசியா முதலியன அடங்கியதுமான பெரியதோர் நிலப்பரப்பு 12,000

ஆண்டுக்கு முன்னே பரவி நிலைத்திருந்தது. அதுவே குமரிகண்டம் எனவும், Lumeria எனவும் ஐரோப்பிய பேராசிரியர்களால் வழங்கப்பட்டன. அக்கண்டம் இருந்ததுபற்றிச் சிலப்பதிகாரம் முதலிய நூற்களின் மேற்கோள் பேராசிரியர் மாகறல் கார்த்திகேயனுரால் இயற்றப்பட்ட "மொழி நூலில்" (Philology) கூறப் பட்டன.

இக்காலத்தில் இந்தியப் பெருங்கடல் (Indian Ocean) இருக்கும் இடத்திலே சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முன்னே குமரிகண்டம் என்பதோர் கண்டம் நிலைத்திருந் தது அக்கண்டமும், இப்போதிருக்கும் இந்திய நாடும் அக்காலத்திலே ஒரே நிலத்தொடர்புள்ள குமரி கண்ட மாய் இருந்தது. அக்காலத்தில் இந்தியாவுக்கும் குமரி நாடு என்ற பெயர் வழங்கியது. இந்தியா என்ற பெயர் கிரேக்க மன்னராகிய அலெக்ஸாண்டர் தி கிரேட் என்பவரால் வழங்கப்பட்டது. மேற்கூறப்பட்ட குமரிகண்டத் திலும் இந்திய கண்டத்திலும் முதலில் தோன்றி வாழ்ந்த மக்கள் திராவிடத் தமிழர்களே ஆவர். மங்கோலியர், ஆரியர் முதலானோர் மிகவும் பிந்திய காலத்தில் இந்தியாவில் குடிவந்தவர்கள். அவர்களைப் பற்றியும் இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றது. அக்குமரிகண்டத்தின் வரலாறும் இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றது.

★

சிலப்பதிகாரம் உரையாசிரியர் பேரறிஞர் அடியார்க்கு நல்லார் இயற்றியது.

வடிவேல் எறிந்த வான்பகை பொறாது பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங் கடல் கொள்ள எனவும், நெடியோன் குன்றமும், தொடி யோன் பௌவமும் என்புழி அடியார்க்கு நல்லார் கூறுவதாவது "அக்காலத்து அவர் நாட்டின் தென்பாலி முகத்திற்கு வட எல்லையாகிய பஃறுளியென்னும் ஆற்றுக் கும் இடையே எழுநூற்றுக்காவதம் ஆறும், அவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரை நாடும், ஏழ்முன் பாலைநாடும், ஏழ்பின்பாலைநாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குண நாடும், ஏழ் குறும்பனை நாடும், என்னும் இந்நாற்பத்தொன்பது நாடும் பதியும், தடநீர்க்குமரி, வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலால் குமரிப்பௌவம் என்றூர். எழு நூற்றுக்காவதம் ஆறும் "என்றமையின்" குமரியாறும் தனித்தனியாய் நீர் பாய்ந்தது என்பது ஆஸ்திரேலியா (Australia) கண்டம் வரைக்கும் மேற்கூறப்பட்ட குமரி கண்டத்தின் நிலம் பரவியது என்பது அரியலுற்றும்.

*

ப.ஃறுளியாறு எவரால் உண்டாக்கப்பட்டது என்பது பின்வரும் வரலாற்ருன் அறிக

புறநானூற்றிலே நெட்டிமையார் என்னும் புலவர் தாம் பாண்டியர் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய பாட்டிலே வடிம்பலம்பன் என்னும் பாண்டியரால் பஃறுளியாறு உண்டாக்கப்பட்டது என்ருர். அவ்வெண்பா வருமாறு

(வெண்பா)

" செங்கோன் தரைச்செலவைச் சேந்தன் தனியூரான்
துங்கன் தமிழ்த் தாப்புலித் தொடரால் - அங்கிசைத்தான்
சக்கரக்கோ முன்னின்று சாற்றும் பெருவூழி
அக்கரக்கோ நாமஞ்சுவாம் " என்பது

செங்கோன் தரைச்செலவு என்னும் நூல் முதல் தமிழ்ச்சங்கக் காலத்திலே இயற்றப்பட்டதாகும். குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடையிருந்த பெருவள நாட்டு அரசனுகிய "செங்கோன் என்னும் வேந்தனைத் தனியூர்ச் சேந்தன்" என்னும் புலவர் "செங்கோன் தரைச்செலவு" என்னும் நூலில் பாடினுர் செங்கோன் என்னும் வேந்தர் தாம் பல நாட்டிற்கு யாத்திரை சென்று தாம் கண்ட காட்சி, நாட்டுவளம், தொழில் வளம், வாணிப வளம், போர்க் கருவிகள், மக்களின் பழக்க வழக்கங்கள் முதலியன அந்த நூலிலே விளக்கிப் பாடப்பட்டன எனக் கருதப்படுகிறது.

*

பண்டைக்கால முதல் தமிழ்ச்சங்கத்தின் வரலாற்றுச் சுருக்கம்.

12000 ஆண்டுகளுக்கு முன்னிருந்து மூன்று தமிழ்ச் சங்கங்கள் திராவிடத் தமிழர்களாகிய பாண்டிய மன்னர்களால் நடத்தப்பட்டன. அச்சங்கத்தில் இருந்த புலவர்கள் தாம் இயற்கைப்பொருள், இயற்கை நிகழ்ச்சிகள் இயற்கையுண்மை (இயற்கை தத்துவம்) மாந்தர்க்குரிய செந்நெறி முதலியன ஆராய்ந்து பாடினார்கள். மூன்றுந் தமிழ்ச் சங்கத்தின் பின்னரே இயற்கை அல்லாத அதாவது கற்பனை தெய்வங்களையும் பாடினார்கள். முதல் தமிழ்ச்சங்கம் மேலே கூறப்பட்ட குமரிக்கண்டத்தின் கபாடபுரத்திலே நிலவியது, அச்சங்கத்திலே தமிழின் எண்ணும் எழுத்துக்களும் இயற்றப்பட்டனவாம். தமிழின் எண்ணும் எழுத்தும் 12000 ஆண்டுகளின் முன்னே இயற்றப்பட்டனவாகும். ஆதலால், உலகில் உள்ள மற்றைய மொழிகளின் எண்ணும் எழுத்தும் பிற்றையவாம்.

முதல் தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழ்மொழியை ஆராய்ந்து அரிய பல நூற்கள் இயற்றியுள்ளார்கள்வருமாறு:- சிவபெருமான், முருகவேள், முரிஞ்சியூர், முடிநாகர் ஆயர் நிதியின் கிழவர் என இந்தத் தொடக்கத்தவர் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் ஆவர். அவர்கள் உள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார்கள், அவர்களால் பாடப்பட்டன வேத்துணையோர், பரிபாடல் முதுநாரை, முதுகுருகு, களியாவிரை முதலியனவாம். அவர்கள் முன்னோரும் பின்னோருமாக 4440 ஆண்டு சங்கம இருந்தார்கள். அவர்களைச் சங்கம் இரீயினார் என்பத்

தொண்பதின்மர் ஆவர். அந்தச் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட முதல் மாமதுரை மாநாடு ஆகும். அன்றியும் அதங்கோட்டாசான், துராலிங்கர், செம்பூட்சேயர், வையாபிகர், வாய்ப்பியர், பனம்பாரனர், கழாரம்பர், அவனியார், காக்கைப் பாடினியார் (இவர் பெண் புலவராவர்) நற்றத்தனர், வாமனர் முதலாயினேர் முதல் சங்கப் புலவராவர். பெருநாரை, பெருங்குருகு, முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், நாடகத் தமிழ் முதலியன பாடினர்கள். இந்த மாமதுரை மாநாடு உள்ள முதல் குமரிக்கண்டமானது சிறிது சிறிதாகப் பல ஆண்டு பின்னே மூழ்கியது.

அம்முதல் குமரிக்கண்டத்தில் இருந்த திராவிடத்தமிழர் கள் இரண்டாவது குமரிக்கண்டத்திற்குக் குடியேறிப் பல நூற்றண்டு வாழ்ந்து வந்தார்கள். அந்தக்கண்டத்திலே இரண்டாவது தமிழ்ச்சங்கத்தைப் பாண்டிய மன்னர்கள் நிறுவி நடத்தினர்கள், தமிழ்க்கலை வளர்த்தாரகள். அரிய நூல் பல இயற்றினர்கள். அந்நூல் பல பகைஞர்களால் அழிக்கப்பட்டன. இரண்டாவது குமரிக்கண்டம் சிறிது சிறிதாகப் பல ஆண்டு மூழ்கும்போது அக்கண்டத்தில் இருந்த மக்கள் மூன்ருவது குமரிக்கண்டத்திற்குக் குடியேறிப் பல நூற்றண்டு வாழ்ந்தார்கள்.

தமிழ் மூன்ருங்கடைச்சங்கம் 1800 ஆண்டு நடத்தப் பட்டது அது உத்தர மதுரையில் நடத்தப்பட்டது.. அம்மூன்ருவது கண்டமும் சிறிது சிறிதாகப் பல நூற்றண்டுககுப் பின்னர் கடல்கோளால் மூழ்கியது. அந்தத் திராவிடத் தமிழர்கள் வடக்கே கைலாசமலை (Mount Kailas) முதல் தெற்கே பாண்டிய நாடு வரைக்கும் திராவிடத் தமிழர்கள் வாழ்ந்தார்கள். திராவிடத்தமிழ் மன்னர்கள் அரசாண்டார்கள்.

இடைத் தமிழ்ச்சங்கம்

இடைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து ஆராய்ந்த பல அரிய நூற்கள் இயற்றினோர் வருமாறு:

இருந்தையூர்க்கருங்கோழியார், மோசிக்கிரனார், வேளூர்க்காப்பியனுர், சிறுபாண்டரங்கர் திரையன் மாறனார். துவரைக் கோமான், கிரந்தையாரும் என இத்தொடக்கத்தினர். ஐம்பத்தொன்பதின்மர் ஆவர். அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார்கள், அவர்களால் பாடப்பட்டன கலியும், குருவும், வெண்டோளியும், வியாழமாலையகவலும் என்று இத்தொடக்கத்தினவாம். அவர்களுக்கு நூல் இசை நுணுக்கமும, பூதபுராணமும் என இவையாம். அவர்கள் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு சங்கம் இருந்தார்கள். அவர்களைச் சங்கம இரீயனர் வெண்டோட் செழியனர், முதலாக முடத்திருமாறனார் ஈருக ஐம்பத்தொன்பதின்மர் ஆவர். அவருள் ஐவர் பாண்டியர்.

இரண்டாம் தமிழ்ச்சங்கம் கபாடபுரத்திலே நடைபெற்றது. இரண்டாமுறை கடல்கோளால் மூழ்கியது இவ்விடைச்சங்கமானது 3700 ஆண்டு நடந்தது, இச்சங்கத்தை ஆதரித்த வள்ளல்கள் வெண்டோச்செழியன் முதலாக முடத்திருமாறனார் ஈருக ஐம்பத்தொன்பதின்மர் கவியரங்கேற்றினார்கள். அவர்களால் இயற்றப்பட்ட நூற்கள் பலஅழிந்தன அல்லது அன்னியராகிய பகைஞர்களால் அழிக்கப்பட்டன.

" தொல்காப்பியம் இடைத் தமிழ்ச்சங்கச் சான்றோர்க்கும் கடைத் தமிழ்ச்சங்கச் சான்றோர்க்கும் இயற்றமிழ் ஆராய்ச்சிக்கு நூலாயது," திராவிடப் பிரகாசிகை" சபாபதிநாவலர் திருவாவடுதுறை சைவ மடத்துப் புலவர். கூறினார்.

கடைத் தமிழ்ச்சங்கம் வரலாறு

தமிழ்க் கடைச்சங்கம் உத்தர மதுரையிலே நடத்தப் பட்டது. கடைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து தமிழ் ஆராய்ந்தோர் பின்வருமாறு:

சிறுமேதாவியார், சேந்தன் பூதனார், அறிவுடையார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறனார், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார், இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் பாடினார்கள். அவர்களால் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது வரிப் பாடலும், கூத்தும், வரியும், பேரிசையும், சிற்றிசையும் என்று இத்தொடக்கத்தனவாம். அவர்கள் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்து நூல் இயற்றியது எண்ணூற்று ஐம்பத்து எட்டு ஆண்டு அவர்களைச் சங்கம் இரீயனார் கடல் கொள்ளப் பட்டு போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் ஆயினார். அவர்கள் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது உத்திரமதுரையாகும். அவருள் கவியரங்கேற்றினார் மூவர் பாண்டியர்கள்

		ஆண்டு
முதல் தமிழ்ச் சங்கம் நடந்த காலம்		4440
இடைத் தமிழ்ச் சங்கம்	,,	3700
கடைத் தமிழ்ச் சங்கம்	,,	1800
திருவள்ளுவர்	,,	1995

திருவள்ளுவமாலை

திருவள்ளுவமாலை திருக்குறளின் சிறப்புப் பாயிரம்:

உக்கிரப் பெருவழுதியார், கபிலர் பரணர், நக்கீரர், மாமூலனர், கல்லாடர், சீத்தலைச் சாத்தனர், மருத்துவன் தாமோதரனர், நாகன்றேவனர், அரிசிற்கிழார், பொன் முடியார், கோதமனர், நத்தத்தனர், முகையலூர் சிறுகருந்தும்பியார், ஆசிரியர் நல்லந்துவனர், கீரந்தையார் சிறுமேதாவியார், நல்கூர்வேள்வியார், தொடித்தலைவிழுத் தாண்டினர், வெள்ளி வீதியார், மாங்குடி மருதனர், எறிச்சலூர் மலாடனர், போக்கியார், மோசிகீரனர், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர், மதுரைத் தமிழ் நாயகனர், பாரதம் பாடிய பெருந்தேவனர், நரிவெருஉத் தலையார், மதுரைத் தமிழ் ஆசிரியர், செங்குன்றூர்க்கிழார், மதுரையறுவை வாணிகர், இளவேட்டனர், கவிசாகரப் பெருந்தேவனர், மதுரைப்பெருமருதனர், கோவூர்க்கிழார், உறையூர் முதுகூற்றனர், இழிகட்பெருங்கண்ணனர், செயிரக்காவிரியார் மகனர், கூத்தனர், செயலூர்க்கொடுஞ் செங்கண்ணனர், வண்ணக் கஞ்சாத்தனர், களத்தூர்க் கிழார், நச்சுமனர், அக்காரக்கனி நச்சுமனர், நப்பாலத் தனர், குலபதி நாயகர், தேனிக்குடிக்கீரனர். கொடி ஞாழன்மாணிபூதனர், கவுணியனர், மதுரைப் பாலாசிரியனர், ஆலங்குடிவங்கனர் என்னும் ஐம்பத்து மூவரும் தனித்தனி இயற்றியருளிய ஐம்பத்து மூன்று வெண்பாக்களுடையது: உக்கிரப்பெருவழுதி கடைச்சங்க காலத்தில் அரங்கிருந்து திருக்குறள் கேட்ட பாண்டியர் கபிலர் முதல் ஆலங்குடிவங்கனர் இறுவாயாக நின்ரூர், கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர் ஆவர்.

நக்கீரனார், களவியலுரையுள் கடைச்சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தார் நாற்பத்தொன்பதின்மர் ஆவர் என்றுரைத்து எடுத்தோதிய சேந்தம்பூதனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறனார், இயற்பெயருடையார், திருவள்ளுவ மாலையில் காணப்படாமை ஒரு மாறுபாடுபோலும் என்று மலையற்க, உக்கிரப்பெருவழுதி கடைச்சங்கக் காலத்து அரங்கிருந்தது திருக்குறள்.

திராவிடம் என்பது இனத்தின் பெயரும் நாட்டின் பெயருமாகும். ஐந்து திராவிடநாடு வருமாறு: தமிழ்நாடு, கேரள நாடு. கருநாடக நாடு, மராட்டிய நாடு, கூர்ஜர நாடு ஆகியனவாம்.

" திராவிட மாபாடியம் " என்றநூல் திருவாவடுதுறை சைவமடத்துத் தலைவர் சிவஞான முனிவரால் இயற்றப் பட்டது.

" திராவிடப்பிரகாசிகை " என்னும் நூல் திருவாவடு துறை சைவ மடத்தைச் சேர்ந்த சபாபதி நாவலரால் இயற்றப்பட்டது.

இம்மேற்கோளால் திராவிடம் என்ற சொல் தமிழ்ச் சொல்லாம் என்பது அறிக.

திராவிடாச்சாரியார் என்பவர் வடமொழியிலேவேதாந்த சூத்திரத்திற்கு ஒரு பாஷியம் செய்தவர். முதல் இராமாநுஜாச்சாரியார் செய்த பாஷியத்துள் இவர் மதம் எடுத்துக கூறினார்: இவர் 1500 ஆண்டுகளுக்கு முன் இருந்தவர் என்று கருதபபடுகிறது. இவர் தமிழ்நாட்டு வேதியராவர். ஐந்து திராவிடநாட்டைச் சேர்ந்த பார்ப் பனர்கள் எனப்படுவர். வடநாட்டிலே திராவிட் (Dravid) என்பது சீரியே என்ற பெயர் தென்னாட்டுப் பார்ப்பனருக்கு வழங்கப்படுகின்றது.

சோழம் என்பது தென் திசைக்கு ஒரு பெயராம்

சோழம் என்பது தென் திசைக்கு ஒரு பெயராகும் ஆதலின் சென்னை, புதுவை, நாகை முதலிய ஊர்களின் கிழக்குக் கடலில் பல காதம் தொலைவரைக்கும் மூழ்கிய நிலப்பரப்பு எல்லாம் முன்னம் சோழநாடு எனப் பெயர் வழங்கப்பட்டது. இப்போதுள்ள சோழநாடு பிற்காலத்திலே நிறுவப்பட்டதாகும், இக்கருத்து பேராசிரியர் கார்த்திகேய னரின் " மொழி நூலில் கூறப்பட்டிருக்கின்றது "

(சைவ மதம்)

மூன்றும் தமிழ்ச் சங்கம் நடத்தப்பட்ட குமரிக்கண்ட மானது மூழ்கத்தொடங்குங்கால் அங்கிருந்த மக்கள் பலர் கைலாசமலைப் பக்கங்களில் சென்றனர். வேறு பலர் தமிழ் நாட்டின் தென் திசையில் வந்து குடியேறினர், கைலாச மலைப பக்கங்களில் சென்றவர்கள் சிவபெருமான், முருக வேள். திருநந்தித்தேவர் முதலாயினோர் ஆவர். அங்கு முதற்கண் சிவமதம் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டது ஆதலின் 12000 ஆண்டுகளுக்கு முன்னே உலகிலே தோன்றிய முதன் மதம் சிவமதமாகும, பிறகு இந்தியா முழுவதும் அச் சிவமதம் பரவியது. வங்காளத்திலுள்ள நந்தா நந்தி என்பவர்கள் திருநந்திதேவரின் மரபினராவர், இந்தியாவிலே பாண்டியர்களின அரசாட்சியும் பலவகைத்தொழில் வணிகம் முதலியன நடத்தினர்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இரும்பு, செம்பு, ஈயம் முதலிய உலோகத் தொழில வகை தெரிந்தவர்கள் என்று வரலாற்றினால் அறியப் படுகின்றது. இராவும் அரத்தைப்பற்றி பின்வருமாறு காண்க,

*

திராவிடத் தமிழர்கள், இருப்பு எஃகு என்பவற்றைப் பல்லாயிரம் ஆண்டிற்கு முன்னர் கண்டு பிடித்தனர்

திருக்குறள் வெருவந்தசெய்யாமை
'' கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம் '' என்பதில்
அரம் என்பது இராவும் அரமாகும்,

நைவான இரும்புகளைக் கடிய [எஃகு அரத்தால் இராவி மட்டம் செய்வது வழக்கம், இதனால் 2000 ஆண்டுக்கு முன்னே இராவும் அரமும் எஃகும் க்ண்டு பிடித்து செயல் படுத்தினர் என்பது அறியலுற்றும் 12000 ஆண்டிற்கு முன்னே, கப்பல் கட்டும் தொழில், கட்டிடம் கட்டும் தொழில் கொத்துத் தொழில் வீடுகட்டும் தச்சுத்தொழில் அரசு ஓச்சும் முறைமை தங்கம் வெள்ளி ·செம்பு, முதலியவற்ருல் பணம். காசு முதலியன இயற்றினுர்கள், வார்ப்புத் தொழில் முதலிய தொழில்களில் திராவிடத் தமிழர்கள் சிறந்துவிளங்குகிருர்கள், சுண்ணும்புச் சாந்து மண்ணுல் பானை சட்டி முதலியன செய்தல் வண்டி. குடை, பட்டுத்துணி நெய்தல் முதலியவற்றில் திராவிடத்தமிழர்கள் சிறந்து விளங்கினுர்கள்

அகத்திய முனிவர் திரணதூமாக்கினியர்

- என்பவர்களைப்பற்றிய விளக்கம்

பேராசிரியர் மார்ஸ்டன்

(MARSDEN B. A. I. A. R G. J. M R J. என்பவரால் எழுதப்பட்டது.

The history of India என்பதில் ஆரியரின் வரலாறு Aria - Arya - Aryan - Ara - re Latin மொழியில் (One who plough) உழுபவர் என்பது பொருளாகும். From " Armsworth Encyclopedia " The premitive Aryan dwelling someware in west bentral Urasia. All there people are radically baucasians ". இவ்வாரியர்கள் இயற்கையாய்க் காகசியராவர். ரசியா (Rusia) நாட்டிலே காஸ்பியன்கடலுக்கும் (Casbian Sea) அரல்கடலுக்கும் (Aral sea) இடையில் உள்ள நாட்டிலே ஆரியர்கள் வேளாண்மைத்தொழில் செய்திருந்தவர்கள். நீர்வளம், நிலவளம் குன்றிப் பஞ்சம் உண்டானதால் அந்த ஆரியர்கள் அந்நாட்டினின்று புறப்பட்டு ஒரு கூட்டத்தார் ஐரோப்பாவுக்கும், ஒரு கூட்டத்தார் இரானுக்கும், (Persia) ஒரு கூட்டத்தார் இந்தியாவுக்கும் வந்து பாஞ்சாளநாட்டில் தங்கினார்கள். பிறகு, பல ஊர்களுக்குப் போய்த் தங்கினார்கள். அந்தக் காலம் கி மு. (B b) 2500 ஆண்டு ஆகும். 1966ம் ஆண்டுகள் சேர்ந்தால் 4466 ஆண்டாகும். அதனை (Rig veda) காலம் என்பர். அகத்திய முனிவரும் ருக்கு வேத ஆரியரோடு அதே பாஞ்சாள நாட்டிற்கு வந்தார். அவர் அங்குப் பல ஆண்டு தங்கினார். அகஸ்தியர் அப்போழுதே வயது முதிர்ந்தவர். அவர் தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் இலக்கியம், இலக்கணம் கற்றறிய பல ஆண்டாகும்,

பிறகு, தமிழ்நாட்டிலிருந்து குமரிக்கண்டத்தில் உள்ள மாமதுரை கபாடபுரத்திலுள்ள தமிழ்ச் சங்கத்திற்கு 7000 காதம் தொலே போக மிகுந்த காலம் ஆகும். ஆதலால், அகத்தியமுனிவர் தாம் முதல் இரண்டாந் தமிழ்ச்சங்கத்திற்குப் போனதில்லே அதில் புலவரானதில்லே அகஸ்தியர்ஞானம், அகஸ்தியர்வாகடம் முதலியவற்றைப் பிறர் இயற்றி அகஸ்தியரின் பெயர் கொடுத்ததுபோல, அகத்தியம் (இலக்கணமும்) பிறர் இயற்றி அகத்தியரின் பெயரைக் கொடுத்துத் திராவிடத் தமிழர்களின் கொள்கைகளே மாற்ற முயன்ற சூழ்ச்சியாகும். நிற்க, திரணதூமாக்கினியர் என்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதிசைவக்குருக்கள் இனம் ஆவர் என்று கருதப்படு கிறது. அவர் மதுரைக்கு அண்மையிலுள்ள தொல் காப்பியக்குடி என்ற ஊரிலே பிறந்தவர். நிற்க, ஆரியரின் அதர்வணவேதத்தின் சதபாதப்பிரமணத்திலே மேலே கூறப்பட்ட குமரிக்கண்டம் மூழ்கியதுபற்றிக் கூறப்பட்டுள்ளது என்பதுபற்றி (மாசுறல் கார்த்திகேய ஞரின் மொழிநூலில்) கூறப்பட்டுள்ளது. குமரிக்கண்டத் தின் இரண்டாவது தமிழ்ச்சங்கத்தின் இறுதிக்காலத்திலே ஆரியர் அகத்தியர் உள்பட இந்தியாவுக்குக் குடியேறினர். அகத்தியனுருக்கு முன்னே 7500 ஆண்டு மாமதுரை - கபாடபுரத்தின் தமிழ்ச்சங்கம் முந்தியதாகும்.

★

ஆரிய (பார்ப்பன) சமஸ்கிருதமொழியானது திராவிட மொழிகளின் எழுத்துக்களில் எழுதப்பட்டது

பேராசிரியர் Reid, பேராசிரியர் Marsden முதலான ஐரோப்பிய அறிஞர்களின் ஆராய்ச்சிப்படி ஆரியர் (பார்ப்பனர்) தாம் 5000 ஆண்டிற்குமுன்னே இந்தியாவிற்குக் குடிவந்தார்கள். அவர்களின் சமஸ்கிருத மொழிக்குச் சொந்த எழுத்து இல்லை. ஆயினும், தமிழ் எழுத்து, பாலியெழுத்து, நாகரி எழுத்து என்பவற்றில் சமஸ்கிருதம் எழுதப்பட்டது, தமிழ்நாட்டிலே குடிவந்த ஆரியர் (பார்ப்பனர்) தமிழ் எழுத்தோடு சில புதிய எழுத்துக்களைச் சேர்த்துக் கிரந்தம் என்ற எழுத்தை இயற்றி, அதில் சமஸ்கிருதம் எழுதினார்கள். அவ்வாறே வடநாட்டிலே குடியேறிய ஆரியர் (பார்ப்பனர்) பாலி எழுத்தோடு புதிய எழுத்துக்களைச் சேர்த்துப் பிரம்மி என்ற எழுத்தை இயற்றி அதில் சமஸ்கிருதம் எழுதினார்கள். அவை அன்றியும், யூதம் (Hebrew) எழுத்திலே சில புதிய எழுத்துக்களைச் சேர்த்து நாகரி - நாகரம் என்ற எழுத்தை இயற்றி அதில் சமஸ்கிருதமும், இந்தி மொழியும் எழுதுகின்றார்கள். இந்தக் காலத்திலே நாகரி எழுத்திலேமட்டும் இந்தியும் சமஸ்கிருதமும் எழுதப்படுகின்றன, ஆதலால், தமிழ் எழுத்திலிருந்து கிரந்தம் தோன்றியது, பாலி என்ற எழுத்திலிருந்து பிரம்மி தோன்றியது, யூதம் (Hebrew) மொழியிலிருந்து நாகரி - நாகரம் என்ற எழுத்து தோன்றியது, சிந்து மாகாணத்திலுள்ள தொல்காலத் திராவிடநகரமான மோகஞ்சோடாரோவின் எழுத்தி லிருந்து யூதம் (Hebrew) தோன்றியது. 12000 ஆண்டு களுக்கு முன்னே ஆஸ்திரேலியா சேர்ந்திருந்த குமரிக் கண்டத்திலே நடைபெற்ற முதல் தமிழ்ச்சங்கத்திலே

அறிவில் சிறந்த தமிழ்ப்புலவர்களால் தமிழ்மொழிக்கு எண்ணும் எழுத்தும் இயற்றித் தமிழ் உலகத்திற்கு வழங்கினார்கள். ஆதலால், உலகிலே முதலில் தோன்றிய எண்ணும் எழுத்தும் நம் இனிய தமிழின் எண்ணும் எழுத்துமாகும்.

இருக்குவேதம் (Rig Veda) ஆரியர்கள் குமரிக்கண்டம் கடல்கோள்பற்றிக்கூறியது

கி. மு. (கிறிஸ்துக்குமுன்) 2500 ஆண்டிற்குமுன்னே இந்தியாவிலே குடியேறிய ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) மேற்கூறப்பட்ட குமரிக்கண்டத்தின் கடல்கோளைப்பற்றிக் கேள்வியுற்று அதர்வணவேதம் "சதபாதப்பிரமணத்திலும், மச்சப்புராணத்திலும்" கூறப்பட்டுள்ளன. பாரசீக மொழியிலே ஜெந்தவஸ்தம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது என்பதைப் பேராசிரியர் கார்த்திகேயனாரின் "மொழி நூலிலே" கூறப்பட்டது. நிற்க, மேற்கூறப்பட்ட நிலப் பரப்பைக் கடல்கொண்டபின்னர் அவ்விடத்திலே இந்தியப் பெருங்கடல் (Indian Ocean) தோற்றம் அளித்தது.

தமிழ் எழுத்துள்ள செப்பேடுகள் பல காணப்பட்டன

அதுபற்றி ஆங்காங்குள்ள தீவுகளிலே கண்டு எடுக்கப் பட்ட தமிழ் எழுத்துள்ள செப்பேடுகளானும் சிலாசாசனங் களானும் மேற்கூறப்பட்ட வளநாடு, தென்பாலிநாடு. பேரிலங்கை (பிரெஞ்சு மொழியில் Lemouria) என்பன பல்லாயிரம் ஆண்டிற்கு முன்னே இருந்து கடல்கோளால் மூழ்கின என்பது மெய்ப்பிக்கப்பட்டது. அந் நிலப்பரப்பு (குமரிக்கண்டம்) வையகத்திலே நடுமையான நிலம் ஆகும். கிறிஸ்துவ பழைய ஏற்பாட்டிலே (Old Testament-இல்) கூறப்பட்ட நோவாவின் (Novak) வரலாறும் மேற்கூறப் பட்ட கடல்கோளின் காலத்திலே நிகழ்ந்திருக்கலாம். எனக் கருதப்படுகின்றது, மேற்கூறப்பட்ட தென்பாலிநாடும் தென்வள நாடும் பேரிலங்கையும் கொண்ட குமரிக் கண்டத்திலே வையகத்தில் முதற்கண் மாந்தர் தோன்றினர் என்பது உண்மையாகும், இது பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்களின் முடிவுமாகும.

திராவிடத் தமிழ்மக்களே உலகில் முதற்கண் தோன்றினர்

மேற்கூறப்பட்ட குமரிக்கண்டத்திலே முதலில் தோன்றினோர் திராவிடத்தமிழர்களே ஆவர்.

அன்னோர் ஆஸ்திரேலியா (Australia), அமெரிக்கா (America) கண்டத்திலும், எகிப்திலும், சுமேரியாவிலும், நடு ஆசியா கண்டத்திலும் சென்று பழங்குடி மக்களாயினர். அன்றியும், இந்தியாவின் தெற்கேயுள்ள ஐந்து நாட்டிற்குப் பெயர் பஞ்சதிராவிடம் ஆகும். அவை வருமாறு: தமிழ் நாடு. கேரளநாடு, மைசூர்நாடு தெலுங்குநாடு, மகாராட்டிர நாடு என்பனவாம்.

நிற்க, ஜோவச்சிம் லில்லவேல் (Joachim Lillewel) என்பாரும். எச் ஜி வெல்ஸ் (H G. Wells) என்பாரும் தத்தம் நூலிலே நவின்ற உண்மை வரலாறு வருமாறு :-

300 ஆண்டிற்கு முன்னே இருந்த போலாண்டைச் சேர்ந்த பேராசிரியர் ஜோவச்சிம் லில்லவேல் என்பார் தாம் எழுதிய வையகவரலாறு என்னும் நூலிலே கூறியதுவருமாறு: எகிப்தியரும் சுமேரியரும் இந்தியாவினின்று எகிப்திய நாட்டில் குடியேறிப் பெரும் புகழ் பெற்றனர் எனவும் பபிலோன் முதலிய நாட்டுக்களில் குடியேறிய சுமேரியரும் பெரும் புகழ் பெற்றனர். பேராசிரியர் எச். ஜீ. வெல்ஸ் (H G Wells) என்னும் ஆங்கிலப் பேரறிஞரும் தாம் எழுதிய " வையக வரலாற்றுச் சுருக்கம் " (A Short History of the World) என்னும் நூலிலே பின்வருமாறு கூறினர். இந்தக் காலத்திலே இவ்வையகம் அடைந்துள்ள துங்கத்திற்கு நாகரிகத்திற்கு (civilization) பண்டைத் திராவிடத்தமிழர் களின் துங்கமே வாயிலாகும் எனக் கூறினர். இதனல் ஆரிய நாகரிகம் உலகிற்கு நன்மை செய்யவில்லை என்று அறியலுற்றும். நிற்க, வேறு சில திராவிடத்தமிழர்களைப்பற்றி கூறுவாம.

இராவணேசுரரின் குடிபடைகள் வெத்தார் (Veddar) என்னும் மக்கள் இன்னும் இலங்கைத்தீவிலே வடகீழ்ப் பகுதியில் பண்டைப் பழக்க வழக்கங்களுடன் தனித்து வாழ்கின்றனர். இவ்வெத்தர்களும் நீலகிரித்தோடவரும் (Toddas) திராவிடத் தமிழர்களேயாவர். வெத்தாரின் (Veddas) வரலாறு கி. மு. 6ஆம் நூற்றுண்டிலே அதாவது 2600 ஆண்டிற்கு முன் எழுதப்பட்டது என்று (Harmswarty Encyclopediaவில் எழுதப்பட்டிருக்கின்றது.

பாகதம், திராவிடம், தமிழம், பாலி என்பன ஒரு தொடர்புடைய மொழிகளாகும்

உலகம் தோற்ற முதல் குமரிக்கண்டத்திலே வழங்கிய முதல் மொழி "பாகதம்" என்ற மொழியாகும். அது இலக்கணமின்றி இயற்கைப்பழக்க வழக்கத்தில் தோன்றிய மொழியாம்: அம்மொழியை 12000 ஆண்டிற்கு முன்னே இருந்த முதல் தமிழ்ச்சங்கத்திலே இருந்த புலவர்கள் ஆராய்ந்து இலக்கணம் இயற்றினர். முதல் தமிழ்ச் சங்க இறுதிக்காலத்தில் தோன்றிய அகத்தியம் என்ற நூல் சங்கப் புலவரால் ஏற்கப்படவில்லை. ஆதலால், திரணதூமாக்கினியார் தாம் தமிழகத்தின் வழக்கப்படி முன்னிருந்த புலவர்கள் ஆராய்ந்த கருத்துக்களைத் திரட்டி "தொல்காப்பியம்" என்ற நூலையியற்றினர். இதனல் ஒருவாறு தமிழ் இலக்கண வரை நிறுவப்பட்டது. இனி, பாகதம் என்ற பொது மொழியானது, திராவிடத் தமிழ்மொழியும், பாலி மொழியும் என இருவகைப்பட்டன. புத்தசமய நூற்கள் இஞ்ஞான்றும் பாலிமொழியிலே இருக்கின்றன. ஆரியர் இந்தியாவிற்கு வரும் முன்னர் பாஞ்சாலம், கைலாசமலைப் பகுதிகளிலே இருந்த மக்கள் திராவிடத் தமிழ் மொழியும், பாலிமொழியும் பேசினர்கள், அவர்கள் திராவிட மக்கள் ஆவார்கள்:

ஐந்து (பஞ்ச) திராவிடநாடு

தமிழ்நாடு, கேரளாநாடு, மைசூர்நாடு, ஆந்திரநாடு, மகராட்டியநாடு, கூர்ஜரநாடு என்பன பஞ்சதிராவிடநாடாம்.

*

23...2...61-ல் ஆங்கிலச்செய்தி மலரிலே பேராசிரியர் திரு. பேய்ருகோவ் இந்தியப்பெருங்கடலிலே செய்த ஆராய்ச்சி

பேராசிரியர் P. பேய்ருகோவ் (Professor P. Beyrukove, Russian) என்பார் தலைமையில் 10 வகை விஞ்ஞான வகையைச் சேர்ந்த 70 விஞ்ஞானிகளின் ஒற்றுமைப்பின் ஆராய்ச்சியால் "வித்யாழ்" (Vityazh) எனும் பெரியதோர் ஆராய்ச்சிக்கப்பலைக் கொண்டு இந்தியாவின் பெருங் கடலிலே (Indian Ocean) ஆராய்ச்சிசெய்தார். மேலே கூறப்பட்ட பெருவளநாடும், தென்பாலிநாடும், பேரிலங் கையும் கொண்ட குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியை இலங்கைக்குத் தென்கிழக்கிலே 600 கல் (மயில்) தொலை யிலே கடலின்கீழ் மட்டத்தில் கண்டனர். அக்கடலிலே தமது கப்பலை 150 கல் (மயில்) தொலைக்கு ஓட்டி ஆராய்ந் தார்கள். அந்தக் கடலின்கீழுள்ள மலைக்குமேல் 10,000 அடி உயரமுள்ள சிகரங்கள் காணப்பட்டனவாம். வேறு பல இடங்களிலும் ஆராயத்தக்க பல பொருள்கள் உள எனக் கூறினர். இதனால் மேற்கூறப்பட்ட நிலங்கள் கடலிலே மூழ்கின என்பது உண்மையாகும்.

எத்னலஜி என்னும் நூலின் கொள்கை வருமாறு

மேற்கூறப்பட்ட சான்றுகள் அல்லாமல் வையகத்தில் முதலிலே தோன்றிய மாந்தர் திராவிடத்தமிழர்களேயாவர் என்பதற்கு பின்கூறப்பட்ட வரலாற்றினால் அறியலாகும். புதியதாய் 1915-ல் அச்சிடப்பட்ட "Harmsworth Universal Encyclopedia" என்னும் ஆங்கிலப் பெரும்நூலிலே Ethnology எனும் மக்களின்நூலிலே மாந்தரின் தோற்றம் பற்றி எழுதப்பட்டுளது. அதாவது, வையகத்தின் மாந்தர் கள் தாம் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதாகும். அவை வருமாறு:

1-வது Homosapians - Australis - Australoid - Dravidians - Tamilians. இந்த வகுப்பைச் சேர்ந்தோர் வருமாறு: திராவிடத்தமிழர், ஆஸ்திரேலியாவின் பழங்குடிமக்கள் (Red Indian of Amerindian) மலேனேசியர் (Malenesian of Occania) எகிப்தியர் (Egytians-Sumerians) தோடவர் (Toddas) வெத்தார் (Vedda) இவர்கள் இலங்கையின் பழங்குடிமக்கள். அவர்களின் தொகை 5000. இவர்கள் இலங்கையில் பாட்டிகுலோவாவுக்கு (Bathicaloa) வடக்கே வாழ்கின்றூர்கள். அவர்கள் இராவணேசுரரின் பழங்குடிமக்களாவர்.

இவ்வகுப்பைச் சேர்ந்தோர் வருமாறு: ஆஃபிரிக்கப் புஷ்மன் (Africa Bushman), ஆஃபிரிக்கன் நீக்கிரோ (African Nigroes) ஆசிய நீக்கிரோவர் (Asian Negroes) ஓசியானிக் நீக்கிரோவர் (Occeanic Negroes) தாஸ்மானியன் நீக்கிரோயர் (Tasmanian Negroes) அந்தமான் நீக்கிரோவர் (The Andaman Negroes) முதலாயினோர் ஆவர்.

3 வது (Homo Sepeans- The Mongols and Amerian-dian) இவ்வகுப்பைச் சேர்ந்தோர் வருமாறு:

மொங்கோலியர் (Mongoleans) கால்முக் (Kalmuk) எஸ்கிமோ (Eskimo) திபெத்தியர் (Tibetians) சீனர் (Chinese) இந்தோசீன, மலாயர், அமெரிந்தியன் (Amerindian (Red Indians) முதலாயினோராவர்.

3-வது Homo Sapians - Australis - Australoid - Dravidians - Tamilians இவ்வகுப்பைச் சேர்ந்தோர் வருமாறு:

திராவிடத்தமிழர், ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்கள், அமெரிக்காவின் பழங்குடி மக்கள் (Red Indians Amerindians) மலேனேசியர் (Malanesiar - Ocearia) எகிப்தியர் (Egyptiars - Sumeriars) தோடவர் (Teddar) வெத்தார் (Vedda) இவர்கள் இலங்கையின் பழங்குடி மக்கள். அவர்களின் தொகை 5000. இவர்கள் இலங்கையின் பாட்டிகுலோவா (Bathicalova) வுக்கு வடக்கே வாழ்கின்றார்கள். அவர்கள் இராவணேசுரரின் பழங்குடி மக்களாவர்.

4 வது Homo Sapiens - Europacus The white man. இவ்வகுப்பைச்சேர்ந்தோர் வருமாறு :

ஆர்மீனியன், அல்பைன் மாந்தர் (Alpineman) நடுத்தரைக்கடல் மாந்தர் (The Mediterrenian) ஐனுஸ் (Ainus) நோர்டிக் (Nordic) ஃபிரான்ஸ் (France) ஜர்மனியர்: இட்டாலியர், கிரேக்கர் முதலாயினோராவர்.

மேற்கூறப்பட்ட நான்கு பிரிவினின்று மாந்தர் பல கிளைகளாய்ப் பல வகுப்புகளாய் வையகம் எங்கும் பரவி வாழ்கின்றனர். மேற்கூறப்பட்ட நூலிலே முதற்கண் மாந்தர்கள் எந்நாட்டிலே தோன்றினர் என்பது பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது அது வருமாறு :

முதல் மனிதரின் தோற்றம் பற்றிய சின்னம் எதுவும் அமெரிக்காவில் கிடைக்கவில்லை. உலகிலே முதல் மனிதரின் பழங்காலச் சின்னங்கள் ஜாவாவிலே (Java)

இல் காணப்பட்டன. சஸ்செக்கிலும் (Sussec) ஜர்மனியிலும், பிரான்சிலும், ஸ்பெயினிலும், ஆஸ்திரியாவிலும் காணப்பட்டன. (Pithean thropus erectus) என்ற மனிதர் பிற்றைக்காலத்திலே தோன்றினர் எனக்கருதப்படுகின்றது. அதுவும் அம்மனிதர் இந்தியாவினின்று சாவகத்தில் குடியேறினர் எனக்கலைஞரால் கருதப்படுகின்றது. ஷெமக்களின் நூலிலே ஆஸ்திரேலியா (Australia) மக்களை முதலில் வைத்துச் சிறப்பித்து கூறுகின்றமையால் கடல்கோளால் மறைந்த குமரிகண்டம் நிலைத்திருந்த காலத்தில் அங்கிருந்து ஆஸ்திரேலியா நாட்டிற்குக் குடியேறிய ஆஸ்திரேலியா பழங்குடி மக்கள் தாம் திராவிட இனத்தை சேர்ந்தவரே ஆவர், அன்றியும் வையகத்திலே பலமொழிகளிலே திராவிடச் சொற்கள் கலந்திருப்பதால் முதன் மனிதர் திராவிடர்களே ஆவர் என்பது அறியலுற்றும்,

★

திராவிடத் தமிழ்ச்சொற்கள் வையகத்திலே பல மொழிகளிலே கலந்திருப்பது பின்வரும் கட்டுரையால் காண்க

பண்டைக்காலத்திலே திராவிடர்கள் உலகில் பல நாடுகளுக்குச் சென்று குடியேறினர் என்பதற்குப் பல சான்றுகள் உள. சாவகம் (Java) முதலியவகைத் தீவிலுள்ள மொழிகளிலும் தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன. இமயமலைச்சார்பிலே ஓர் வகை வகுப்பார் பேசும் மொழியிலும் தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன. இமயமலை கிழக்கிலுள்ள சூடியநாகபுரியில் ஓர்வகை வகுப்பார் பேசுகின்ற மொழியிலும் தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளனவாம். அம்மலையில் அம்பரம் என்னும் சிகரத்தில் (Mt Abu) வசிப்பவர்கள் பேசும் மொழியிலும் தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன. திபேத்துநாட்டு மொழியிலும் தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன. பலுஜிஸ்தான் (Baluchistan)-ல் "தவுத்புத்திர" என்னும் வகுப்பினர் பேசுகின்ற மொழியில் தமிழ்ச்சொற்கள்கலந்துள்ளன. தவுத்புத்திர் என்பது திராவிட புத்திரர் என்பதாம். அஃகானிஸ்தானைச் சேர்ந்த ஒரு மாவட்டத்திலே "பார்மூவி" (Barzui) என்னும் ஓர்வகை மொழி பேசுகிறார்கள். அது தமிழ்ச்சொற்கள் பெரும்பாலும் கலந்த மொழியாகும்.

இச்செய்தி Dr. Abdul Zaheer என்னும் அஃகானியப் பேராசிரியர் என்பவர் சொன்னார். இதனால் பண்டைக் காலத்திலே நடுஆசியாகண்டத்திலே திராவிடமக்கள் குடியேறி வாழ்ந்தனர் என்பது புலனாகும். நிற்க, ஐரோப்பாவில் ஆஸ்திரியாநாட்டு மொழியிலும் தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன. அன்றியும், மேற்கூறப்பட்ட மொழிகள் திராவிட மொழியின் சிதைவென வரலாற்றில்வல்ல பேராசிரியர்கள்

கூறினர். அஃகானிஸ்தான் (Afganistan) என்னும் நாட்டில் ஒரு நகருக்கு "தமிலுக்" (Tamiluk) என்ற பெயர் வழங்குகின்றது. அந்த நகரிலே குடியேறிய மக்கள் தமிழ்கலந்த மொழி பேசுகின்றனர். பிரம்மபுத்திரா ஆற்றுக்கு அருகாமையிலும் அவ்வாற்றின் காளிக்கட்டத்திலும வாழ்ந்தமையால் திராவுடர்களைப் பிரம்மபுத்திரர் எனவும், காளிபுத்திரர் எனவும் ஜர்மன் பேராசிரியர் கூறுகின்றனர்.

★

மோகன்ஜோடாரோ என்பது சிந்துமாகாணத்தி லுள்ள பண்டைய திராவிடர்களின் நகரம்

அதில் யோகக்குண்டம் இருந்தமையால் ஆரியபதஞ்சலி முனிவருக்குப் பல்லாண்டிற்கு முன்னரே திராவிடர்களால் யோகம் என்பது பயிலப்பட்டது என்பது ஆராய்ச்சியாளர் சொல்லுகிறார்கள். பண்டைக்காலத்தில் அந்நகரத்தில்வாழ்ந்த திராவிடமக்கள் பிற்காலத்தில் பிராயுஸ் (Brahuis) என்று அழைக்கப்படுகின்றார்கள். அவர்கள் மொழி பழந்திராவிடத் தமிழ்ச்சொற்கள் பெரும்பாலும் கலந்தனவாகும். அவர்கள் பலுச்சிஸ்தான், இராஜஸ்தான், பம்பாய் முதலிய மாகாணங்களில் வாழ்கின்றார்கள். அவர்களின் தொகை 6 இலட்சம் ஆவார்கள். அவர்கள் இஸ்லாம் மதத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்னே மோகன்ஜோ

டோரோ நாகரிகம் செழித்திருந்தது. புதைந்து கிடந்த அந்நகரத்தை ஆங்கிலேயர் இந்தியாவை அரசாண்டபோது அதைத் தோண்டி எடுத்து ஆராய்ச்சிசெய்து அது திராவிடர் களின் நாகரிகத்தைச் சேர்ந்தது என்று தெரிவித்தார்கள்.

அந்தக் கோவிலிலே முக்கண்மாதா என்னும் பெண் அணங்கு (பெண் தெய்வம்) கொண்டாடுகிறார்கள். வெகு காலத்திற்கு முற்பட்ட பெண் தெய்வமாம். இது சாக்தேயம் சக்தி என்ற பெண்தெய்வமாம். முக்கண்மாதா என்னும் பெண்தெய்வம் அக்கோவிலிலே வணங்கினார்கள். அக்கோவில் இன்றைக்கும இருக்கின்றது.

அப்பா, அம்மா என்னும் தமிழ்ச்சொற்கள்

உலகிலே பெரும்பான்மையான மொழிகளிலே சிறிது ஓசை மாறி வழங்குகின்றன. Abba (அப்பா) என்னும் சொல் அரமைக் (Aramaic) என்னும் மொழியிலே வழங்கு கின்றது. Abba என்ற அரமைக்சொல் " Meaning father used three times in the N. I. (Newtestament, Rom 8; Mart 14; Gal 4; reference to God) அரமைக்மொழியில் அப்பா என்ற சொல் அபபாவுக்கும் கடவுளுக்கும் வழங்கு கின்றது. தீர்க்கதரிசி ஏசுநாதர் தாம் அரமைக்மொழியிலே மாந்தர்களுக்கு நன்னெறியும் தெய்வநெறியும் புகட்டினர். அம்மொழியினின்று அவரின் போதனை உலகில் பல மொழி களிலே மொழிபெயர்க்கப்பட்டது. அப்பா (Abba) என்னும் சொல்லினின்று பின்வரும் சொற்கள் தோன்றின. (Abbot) அப்பொட் (மடத்தின் தலைவர்; Abbess அப்பேஸ் மடத்தின் தலைவியர். Abbey அப்பே தன்னாட்சிமடம். Abbas அப்பாஸ் இச்சொல் அரபுமொழியிலும் மிகுதியாக வழங்குகின்றது. அப்பாஸ் என்பது முகம்மதுநபியின் மாமனாின் பெயராம்.

அப்பா என்னும் சொல் கடவுளுக்கும் தமிழில் வழங்கு கின்றது. "அம்மையே அப்பா" எனக் கடவுளை அடியார் அழைத்தமை அறிக.

ஊர், நகரம் என்னும் தமிழ்ச்சொற்கள் பல மொழியில் வழங்குகின்றன. சுமேரியா, பபிலோனியா என்னும் நாட்டில்

Barzui - பார் என்பது பூமி, சூழி என்பது மையம், அதாவது பூமி மையம் central Asia

திராவிடத்தமிழர்கள் குடியேறி ஆட்சிநடத்தியபோது அவர்களின் நகரங்களுக்கு ஊர் (Ur) எனவும், ஊர்ஃபா (Urfa) எனவும், (Shurupak) சிறுப்பாக்கம் எனவும் பெயர் வழங்குகின்றன. இந்தியாவிலே ஊர் என்னும் திராவிடத்தமிழ்ச் சொல் சற்று மாற்றுருவம்பெற்று வழங்குகின்றது. அது வருமாறு: சுக்கூர், ஜெய்ப்பூர், ஜோத்பூர், பெங்களூர், துர்க்காபூர், உதைபூர் [இந்த நாட்டையும் வேந்தனையும் பற்றிப் பாடியது உதயணன்காதை என்னும் நூலாகும்] நெல்லூர், ஜம்சத்பூர் முதலியனவாகும். ஆஸ்திரேலியா கண்டத்திலே வாழ்கின்ற பழங்குடிமக்களின் மொழியிலே திராவிடத்தமிழ்ச்சொற்கள் வழங்குகின்றன.

நான், நாம், நீ, நீங்கள், அவள் முதலிய சொற்கள் வழங்குகின்றன. அந்த மக்களின் மண்டையோடு, முகம், உடல் முதலிய உறுப்புக்கள் திராவிடத்தமிழர்களுக்கு இருப்பதுபோலவே இருக்கின்றமையால் அவர்கள் குமரிக்கண்டத்திலின்று ஆஸ்திரேலியாகண்டத்திற்குச் சென்று குடியேறியவர்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர், "மொழிநூல்"

மனோன்மணியம் தமிழ்விடுதூது முதலிய நூல் இயற்றிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை கூறியது

ஆசியாகண்டத்திலும் யுரோபியாகண்டத்திலும் ஆரியம் வருமுன்னே தமிழ்போன்றதோர் முதல் திராவிடத்தமிழ் மொழி இருந்தது என்று மொழி ஆராய்ச்சி வல்ல யுரோப்பிய அறிஞர்கள் கூறுகின்றனர் என்றார்.

ஆங்கிலமேதாவியர் Reverend Caldwell அவர்கள் எழுதிய நூலிலே கூறியிருப்பது வருமாறு :

ஆசியாவில் சைபீரியாநாட்டில் அக்கீரின் மொழியிலே தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன. வடயுரோப்பாவிலே ஃபின்ஸ் [Finlanders] வகுப்பாரின் மொழியிலே திராவிடத்தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன. மீட்டியாநாட்டிலே பிஹிஸ்தான் சாசனங்களிலே தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன. ஃபின்ஸ் என்பவரின் [Fins] என்பவரின் வரலாற்றிலே அவர்கள் ஆசியாகண்டத்தினின்று ஃபின்ஸ்லாண்டில் குடியேறினர் என்று எழுதப்பட்டு உள்ளது. ஃபின்ஸ்லாண்டின் குடியரசுத் தலைவரின் பெயர் கெகோனன் [Kekonan] தமிழில் கேழ் - சிவப்பு, கோனன் - வேந்தன்.

திராவிடத்தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னே இட்டாலிநாட்டிலே குடியேறி, இட்டாலியர்களோடு கலந்தனர் என ரெவ். பிளேட்வெல் என்னும் ஆங்கிலப்பேரறிஞர் கூறினர். இராவணேசுரர் காலத்திற்குமுன் பேரிலங்கையிலின்று அதாவது கடல்கொண்டகுமரிக்கண்டத்திலிருந்துபாரசீகவளைகுடாவைச்சூழ்ந்து குடியேறிய திராவிடர்களினின்று ஃபின்ஸ் என்போரும், மங்கோலியர் என்போரும் தோன்றினரென்று பேராசிரியர் எட்வார்டு கிலோர்டு (Edward Claurd) தாம் வரைந்த நூலிலே கூறியுள்ளார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பால்டிக் (Balticsea) முதல் மலையாளம் வரையிலும் திராவிடரின் தொடர்பு இருந்தது எனவும், ஆரியத்திற்கு முன்னே திராவிடர்கள் உயர்ந்த நாகரிகம் அடைந்தவர்கள் எனவும் கூறினர்.

ஆங்கிலேயப் பேராசிரியர் ஹண்டர் (Prof. Hunter) கூறிய வரலாறு

தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், குடகு, தோடம், கொட்டம், கண்டி முதலிய பாஷைகள் தமிழின் தொடர்புடையனவாகும். சீனமொழியில் நீ என்ற தமிழ்ச் சொல் நீ எனவும், நான் என்பது ஞான் எனவும், யாம் என்றது யாம் எனவும, பெண் என்ற சொல் பெண் எனவும், எஃகு என்ற சொல் எஃ எனவும், மை என்ற சொல் மை எனவும், இடம் என்பதற்குக் கண் எனவும், இரண்டு என்ப தற்கு ஈ எனவும் வழங்கப்படுகின்றனவாம. திராவிடர்க்கும் சீனர்க்கும் பண்டைக்காலத்தில் தொர்டர்புண்டாம் என்பது பின்வரும் வரலாற்றினுல் அறியலாகும். மொங்கோலியர்க ளின்று சீனர் தோன்றினர் என்பது பேரிலங்கையினின்று பாரசீகவளைகுடாவைச்சூழ்ந்து குடியேறிய திராவிடமாந்தரி னின்று மொங்கோலியரும் ஃபின்சும் தோன்றினர் எனக் கூறப்படுகின்றது.

The Birijia, Agoras, Kolarian of North India are Dravidans. இக்காலத்திலும் வாழ்கின்ற பிரிஜியா, அகோ ராஸ், கொலாரியன், சண்டால் என்பவர்கள் திராவிடர்களே ஆவர். பண்டைத்தமிழ்ப் போர்வீரர்கள் வடநாட்டு மன்னர் களால் புகழப்பட்டவர்கள். உதயணன் (Udaipur) காதை யிலே "மன்பெருஞ் சிறப்பினுயிர மாகிய தலைப்பெருஞ் சேனைத் தமிழ்ச்சேனையும்" என்பதனுல் ஆயிரம் சேரியிலிருந்த தமிழர்கள் மகதத்தரசர்க்குத் தலைப்பெருஞ்சேனையாக இருந் தாகள் எனவும், பண்டைக்காலத்திலே மற்றை வகுப்பாரி னும் தமிழரே சிறந்த போர் வீரர்களாகவும், அவ்வரசனின் பரிவாரங்களிலே தமிழ் வீரர்கள் முதன்மையாயினர் எனவும் கூறப்பட்டது.

வட இந்தியாவில் திராவிடத் தமிழர்கள் திமிலர் என்பவர் வாழ்கின்றனர்

வங்காளத்திற்கு வடக்கே நேபாளத்திற்குக் கிழக்கே திமில் என்னும் ஓர் வகுப்பார் மிகுதியாய் வாழ்கின்றார்கள். அந்தத் திமிழரின் பாஷை தமிழ்மொழியோடு பலவாறு ஒத்து இருக்கின்றது. கங்கைக்கரையிலே பண்டைக்காலத்தில் முக்கிய துறைமுகமாகிய "தமிழுக்" என்னும் பட்டினத்திற்கு அப்பெயர் அமைந்தது என்று இலங்கை அறிஞர் கனகசபை பிள்ளையால் செந்தமிழ்மலரிலே எழுதப்பட்டது. ஆரியரின் இருக்குவேதத்திலே சிந்து, கங்கை, சரஸ்வதி என்னும் ஆறுகளின் பெயர் இருத்தலின் இருக்குவேதம் அவ்வாற்றங் கரைகளிலே முற்றுப்பெற்றது என்றறிக. இந்தியாவின் வட நாட்டிலே கி. மு. 2500 ஆண்டின்முன்னே அதாவது ஆரியர் வருவதற்குமுன் திராவிடர்கள் அங்கு பரவி வாழ்ந்திருந் தனர்.

திராவிடத்தமிழர்களின் 90 கோட்டைகளையும், 99 நகரங்களையும் அக்கால ஆரியர் அழித்தனர் என்று ஜெர்மன் பேராசிரியர் மாக்ஸ்முல்லர் தாம் எழுதிய நூலிலே கூறினார். இருக்குவேதத்திலே கூறப்பட்ட "தாசர்" என்போர் தமிழரே ஆவர். அஃதாவது, தசாங்கத்தில் சிறந்தோர் என்பதாம். தசம் என்பது பத்து. தாசர் பத்து உறுப்புடையோர் என்பது பொருள். தசாங்கமாவன : ஊர், நாடு, ஆறு, மலை, செங்கோல், பரி கொடி, மாலை, யானை, முரசு என்பனவாம். பெண்களுக்கும் ஆண்களுக்கும் வையகத்து மாந்தர் அனை வர்க்கும் வேறுபாடின்றி நீதி நெறிகளைப் புகட்டுவது செந் தமிழ் நூல்களே ஆம். திருக்குறள், நாலடியார், கொன்றை

வேந்தன், ஆத்திச்சூடி, நல்வழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம், இன்னா நாற்பது, இனியதுநாற்பது, நான்மணிக்கடிகை, திரிகடுகம் சிறுபஞ்சமூலம் முதலிய நூல்களாம். ஆரிய நீதி நூல் பொதுமையாகக் கூருது; தனிமையாகக் கூறும். 'குலத்துக்கொரு நீதி'' புகட்டும். அதனால் மக்களுள் வேற்றுமையும் மடமையும் மல்கி மக்களை அடிமைக்கும் துன்பத்திற்கும் ஆளாக்கிவிடும். பாலி என்பது பண்டைத்தமிழ் அரசாங்கத்தின் பெயராம். பிறகு, புத்தச்சங்கத்திற்காகி பாஷையின் பெயர்க்காயிற்று. புத்தசங்கத்தார் பாலிபாஷை வழங்குவராயினர். ஆரியம் இந்தியாவிற்கு வருமுன்னே மேற்கூறப்பட்ட கடல்கோளுக்கு முன்னம் தென்பாலிநாட்டிலே பாலி என்னும் மொழியும் வழங்கியது. பாகதம் என்னும் முதல் திராவிடமொழியினின்று செந்தமிழ்மொழியும் பாலிமொழியும் தோன்றலாயின.

பண்டைய முத்தமிழ்ச்சங்கத்தில் ஆராயப்பட்டது செந்தமிழ்மொழியாம். நிற்க. வங்கியசேகரன் என்பார் விக்கிரமச் சோழன் காலத்திலே மதுரையில் அரசுபுரிந்த பாண்டியன் கடைத்தமிழ்ச்சங்கத்தை நிறுவி, அதற்குரிய கட்டளைகளை ஏற்படுத்தி, நூலாராய்ச்சியும் நூல் இயற்றலுமாகிய நெறியில் நின்று தமிழை வளர்த்தார். இவர் தில்லை தீட்சிதர்க்கு வீடுகள் கட்டி வழங்கினார்.

தமிழும் ஆரியமும் வேறுபட்டன என்பது பின்வரும் சைவ, வைணவாச்சாரியார்களின் பாடல்களால் அறிக

"திருநாவுக்கரசரின் திருமறைக்காடு திருத்தாண்டவம் "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் அண்ணாமலையுறை அண்ணல் கண்டாய்" எனவும், "திருக்கடம்பந்துறை திருக்குறுந்தொகை "ஆரியம் தமிழோடு இசையானவன்" எனவும், திருவாவடுதுறை திருத்தாண்டவம் "செந்தமிழோடு ஆரியானைச் சீரியானை" எனவும், நம்மாழ்வார் பாடியது "இன்றமிழ்ப் பாடிய ஈசனையாதியாய் என்னெஞ்சத்துள் இருந்திருந் திருந்த தமிழ் நூலிவை மொழிந்து" எனவும் பாடினர்.

இவற்றால் தமிழ் வேறு, ஆரியம் வேறு என்பது அறியப் படுகின்றது. நிற்க,

ஆரியரின் இலக்கியம்பற்றியது

ஆரியர் (பார்ப்பனர்) கி. மு. 2500 ஆண்டின்முன்னே இந்தியாவிற்கு வந்தபோது அவர்கள் கொண்டுவந்த இருக்கு வேதத்தில் இருந்த இலக்கியச்சொற்கள் மட்டுமே ஆரியரின சொற்களாயின. அதன் பின்னர் ஆரியத்தில் சேர்ந்த சொற்கள் பாலி-மொழியினின்றும் அக்காலத்து இந்தியாவில் வழங்கிய மொழியினின்றும் எடுக்கப்பட்டன

ஆரியத்திலே வழங்கும் பாலிமொழிகள் சில ஒப்பனை வருமாறு :

பாலிமொழியின் சொல் ஆரியத்தில் வழங்குகின்றன. பேடம் — ப்ரேதம் ; பியம் — ப்ரியம் ; தினம் — த்ருணம் ; தானம் — ஸ்தானம் ; திதி — ஸ்திதி.

மேற்படி சொற்களின் உரை வருமாறு : பேடம் — பிணம்; தினம் — திரணம் (புல்); பியம்—விருப்பம், மகிழ்ச்சி. நிற்க.

பல தமிழ்ச்சொல் ஆரியச்சொல்லாய் வழங்குகின்றன

காலம், உலகம் என்னும் சொற்கள் ஆரியச்சொற்கள் அல்ல என்றனர் அறிஞர் ஈசானதேசிகர். உலகம் என்னும் சொல் வடமொழியில் லோகம் என்ருயிற்று. நிற்க,

முகம், தாமரை என்னும் சொற்கள் தமிழ்ச்சொற்கள் ஆதம் என்று இலங்கை அறிஞர் பேராசிரியர் தாமோதரனூர் கூறினர். (தமிழ்மொழிநூல்)

★

சில தமிழ்ச்சொற்களுக்கு விளக்கம்

வாயினின்று ஒலிக்கும் சொல்லின் தொகுதி, வாக்கியம், வாசகம், வாச்சகம் திருவாசகம் திருவாய்மொழி என்னும் சொற்களாம். நிற்க,

ஒதி, கழகம், கல்லூரி, சாடு முதலிய தமிழ்ச்சொற்களால் இமயம் முதலிய சத்தகூடங்களில் வளர்ந்தோங்கியது தமிழ் விஞ்லைசயம் என்பது விளங்குகின்றது.

ஒதி - மலை, கல்வி என்பது மலையில் வளர்ந்தது என்பது ஆதம். கழகம், கல்லகம். களகம், கழகம், கல்லூரி0 உரி — முனை, மலைச்சிகரத்தில் உண்டாயதென்பது. கல் உலை — கல்லூரி, கலாசாலை. சாடு - புலமை. சாடுவர் — நாவலர், சாடு - தெலுங்கில் சதவு — படிப்பு. சாடு - சட்டம், தத்துவநூல், நீதிநூல் முதலியனவாம். (மொழிநூல்)

வையகத்திலே முதற்கண் வானூர்தியினைக் கண்டுபிடித்துச் செய்து ஓட்டியவர் திராவிடத்தமிழர்களே ஆவர்

" திரள் விமானமது வான்மிசை யுயர்ந்தவவனும் " என்பதனால் பண்டைக்காலத்தில் வானூர்தியில் திராவிடத் தமிழர்கள் சஞ்சரித்தனர் என்பது உண்மையாம். அன்றியும், இராவணேசுரர் சீதையை ஆகாயவிமானத்தில் கொண்டு போனார். அதனால் அக்காலத்தின் திராவிடர்கள் வானூர்தி யின் கலை நனகு அறிந்தனர் என்பது அறியவுற்றும். அது காற்றுவிசையால் ஓட்டினர் எனக் கருதப்படுகிறது. நிற்க,

ஜெர்மன் பேராசிரியர் ஹெக்கல் என்பவர் கூறிய கருத்து வருமாறு :

கடல்கோளால் மூழ்கிய குமரிக்கண்டத்தின் பெருநிலம் தான் இந்நிலவுலக முழுமைக்கும் நடுமையான பெரும் நிலப் பரப்பாகலின் இறைவரால் படைக்கப்பட்ட மக்கள்முதற்கண் இந்நிலத்தில் தோன்றிப் பின்னர், நாற்றிசையிலும் சென்று பல வேறுபட்ட இனத்தாராயினர் என்று எழுதினர்.

கிரந்த எழுத்து தமிழினின்று தோன்றிய எழுத்தாம்

திராவிடத்தமிழ்மொழியே முதல் தோன்றிய மொழியாம். பாலியும், பஞ்சத்திராவிடமொழியும் தமிழ்மொழியின் வழி மொழிகளாகும். கிரந்தம என்பது தமிழினின்று தோன்றிய சார்பு எழுத்தாம். தமிழ்நாட்டிலுள்ள சம்ஸ்கிருத நூல்கள் அனைத்தும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டனவாகும். கிரந்தம் வட தமிழ் என்பர் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பேரகராதியில். நிற்க.

மேகாஸ்தனிஸ் என்னும்
கிரேக்க தத்துவ அறிஞர் கூறியது

மேற்கூறப்பட்ட கிரேக்க அறிஞர் தம் நூலிலே எழுதியது வருமாறு: இலங்கை என்னும் தீவு இந்தியாவினின்று ஒரு பெரிய ஆற்றினுல் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவர் கூறிய ஆறு குமரியாறு எனக் கருதப்படுகின்றது. அக்காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் கட்டப் பட்டிருந்தது. அந்தக் குமரியாறு கடல்கோளால் மூழ்கப் பட்டது. பின்னர், அதன் இருமருங்கிலும் தங்கிய அதன் சிதைவே இராமாயணத்தில் கூறிய அணைக்கட்டு ஆகும். கி. மு. 1000 ஆண்டின் முன்னே அதாவது இற்றைக்கு 3000 ஆண்டின்முன் குமரியாறு கடலில் மூழ்கியது எனக் கருதப்படுகிறது.

இராமாயணம் கி. மு. 1000 ஆண்டிற்கி முன்னே நிகழ்ந்தது என்று இந்திய வரலாற்றில் கூறப்படுகின்றது. ஷ குமரியாறு கடற்கோளால் மூழ்கியது என்பது இராமா யணக் கதைக்கு முன்னே நிகழ்ந்ததாம். நிற்க,

முதல் திராவிடத்தமிழர்களின் பெருமையும்,
அவர்கள் உலகிற்குக் கற்பித்த கலையும் வருமாறு:

உலகிலே முதலில் தோன்றிய வேந்தர்கள் திராவிட மன்னர்களே ஆவர். அவர்கள் இராவணேசுரர்களின் முன்னோர்களிலும், வாலி சுக்கிரிபர்களின் முன்னோர்களி லும் தோன்றிய திராவிடத்தமிழர்களே ஆவர். குமரிக் கண்டம் கடல்கோள் எய்தற்கு முன்னர் அக்கண்டத்தை அரசாட்சி புரிந்தோர் திராவிடமன்னர்களே ஆவர்.

"பாலி என்பது மன்னரின் சங்கம்". அதாவது, கச்சேரி என்பதும் அதுவேயாம். பல் - பாலி; பல்–இசை யாகலின் ஆராய்ச்சிமணியின் ஓசைக் குறிப்பால் குற்றம் தெரிந்து ஆராய்வார் என்பதாம். கச்சேரி என்பதற்கும் அப்பொருளாம். கச்சேரி என்பது மணியோசையாகும். "மொழிநூல்" நிற்க.

வையகத்திலே முதலில் இரும்பு கண்டுபிடித்தோர் திராவிடத்தமிழர்களே ஆவர்

1949ல் இங்கிலாந்திலே நடந்த இரும்புத் தொழிற் சங்கத்திலே (British Steel Federation) அதன் தலைவர் சொற்பொழிவாற்றியது.

"Sir William Larke. Director British Iron Steel Federation, Says the centre of iron origin is variously placed in India where there are historical tradition and remainings indicating a highly developed iron culture in Tiruchinopoly and Hyderabad district."

இதனுல் இரும்பு முதலிய உலோகங்களை முதலில் கண்டுபிடித்தோர் திராவிடத்தமிழர்களே ஆவர் எனவும் பின எகிப்தியரும், சுமேரியரும இரும்பு முதலியன கண்டு பிடித்தனர் எனவும் கூறப்படுகிறது. கோபுரம் கட்டுவது திராவிடச் சிற்பிகளின் கலையாம். தமிழ்நாட்டிலும் எகிப்தி லும் கோபுரங்கள் கட்டப்பட்டிருத்தலின் இவ்விருநாட்டா ரும் திராவிடர்களே ஆவர்.

நெருப்பு செய்யும் சிக்கிமுக்கிக்கல் மண்ணாலும் கல்லா லும் வனைந்த சட்டிப்பானை குடம் முதலில் திராவிடர்களே கண்டுபிடித்தார்கள். பருத்திநூல் பட்டுநூலால் துணி நெய்தல், நகைகள் செய்தல், மகளிர் காதில் அணியும்

(தோடு மலர்) மோதிரம், சங்கிலி, கால் கொலுசு, கைக் காப்பு என்பன முதலில் கண்டுபிடித்துச் செய்தோர் திராவிடத்தமிழர்களே ஆவர். பனையோலையில் படிக்கும் நூல்செய்தோர் பண்டைத்திராவிடர்களே. செப்புப்பட்டையமும், மரவுரியும், நிழல்கொடை இல்லையால், தாழைமடல் துணி முதலியவற்றாலும் செய்ததும் திராவிடர்களேயாவர். படுக்கை, மெத்தை "இலவம்பஞ்சிற்றுயில்" முதலியன செய்தோர் திராவிடர்களே. சிற்பத்திற்குரிய பல கருவிகள், ஆணி, உளி, திருப்புளி, கொறடா, சுத்தி, சம்முட்டி, கொட்டாபுளி, அலகு, ஊசி, துருத்தி, படகு, மரக்கலம், பாய்க்கட்டிக்கப்பல் முதலியன முதற்கண் கண்டுபிடித்தோர் திராவிடர்களே; மருந்துவகைகள், கலங்கரை விளக்கம் (light house), உழவு கருவிகள், போர்க்கருவிகள், நாணயப்பயணம் முதலியன முதற்கண் கண்டு பிடித்து வழங்கியவர்கள் திராவிடத்தமிழர்களே ஆவார்.

இந்தியாவின் கிழக்குக்கடற்கரைக்குக் கிழக்கே 40 மைலுக்கு அப்பால் கடல் இருந்த வரலாறு:

பண்டைக்காலத்திலே இந்தியாவின் கிழக்குக் கடல் 40 கல்லுக்கு அப்பால் இருந்தது என்பதற்குப் பின்வரும் கல்பாறையில் செதுக்கப்பட்ட எழுத்தால் அறியலுற்றும்- அதாவது, புதுச்சேரிக்கு மேற்கே முற்காலத்திருந்த பாகூர் பாறையில் பின்வருமாறு செதுக்கப்பட்டிருந்தன. பாகூர்க்கு கிழக்கே கடல் 4 காதம், மேற்கே திருவண்ணாமலை 4 காதம் தெற்கே சிதம்பரம் 4 காதம், வடக்கே மதுராந்தகம் 4 கல் தொலையுள்ளன என்பதாகும். 10 காதம் பாகூருக்குக் கிழக்கே இருந்த கடல் ஒரு காதம் தொலையில் இருப்பதால் 3 காதம் 30 மைல் கடல்கோள் நிகழ்ந்தது எனப் புலனுயிற்று. (மொழிநூல்)

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குண்டான தொடர்பு

நமது பண்டைய நூற்களிலே வழங்கிய அமெரிக்காவின் பெயர் வருமாறு: உத்தரகுரு, சித்தபுரி, நாகபுரி, நாகர் உலகம் என்பனவாம். பேரிலங்கையும், குமரி கண்டத்தின் கிழக்குப்பகுதியின் நிலப்பரப்பு கடல்கோளிற்கு முன்பே இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் மக்களின் போக்குவரத்து நிகழ்ந்திருந்தது. காவிரிப்பூம்பட்டினத்துப் பந்தன் என்னும் வணிகர் தாம் நாகர் உலகத்திற்குச் சென்று அங்குள்ள மகளிரை மணந்து, ஒரு பொற்படாமும், கருநெல்லிக்கனியும்பெற்று நாகன் என்னும் பெயர் பூண்டு இந்தியாவிற்குத் திரும்பி வந்தார். அந்தப் பொற்படாம் போர்த்துவார்க்கு இளமைத்தோற்றம் அளிப்பதும் அந்தக் கருநெல்லிக்கனி உண்பார்க்கு நீண்ட ஆயுள் உண்டாதலுமாகும். அன்றியும், நாகப்பட்டினச் சோழன் நாகர் உலகத்திற்குச் சென்று அங்குள்ள ஒரு கன்னியை மணந்து ஆதொண்டச்சக்கரவர்த்தியைப் பெற்றனர் அதனல் நாகப்பட்டினம் என்னும் பெயர் வழங்கலாயிற்று. கரிகாற்பெருவளவன்காலத்தே சாரமா முனிவர் நாகர் உலகஞ்சென்று செவ்வந்தி என்னும் மூலிகை கொண்டுவந்தார் சூரவாதித்தன் என்பார் அந்நாகர் உலகத்திற்குச் சென்று வெற்றிலைக்கொடியைக் கொண்டுவந்து துளுவநாட்டிலே பயிரிட்டுப் பரவச்செய்தார். நிற்க, மேற்கூறப்பட்ட பொற்படாமும் நெல்லிக்கனியில் ஒரு பாதியும் ஔவைப்பிராட்டியார் பந்தனல் கொடுக்கப் பெற்ருர். "1841ஆம் ஆண்டில் வட அமெரிக்காவில் சின்சினட்டி என்னும் நகரத்தில் ஒரு சிலாசாசனம் கிடைத்தது. அதனை ஆராய்ந்து பார்த்ததில் அங்கு முன்னே திராவிடத்தமிழர் இருந்தார்கள் என்பது புலனுகின்றது. இச்செய்தி 9-10-1912-இல் இந்தியாவின் ஆங்கிலச் செய்தி மலரில் அச்சிடப்பட்டது.

திராவிடத்தமிழர்கள் முதலில் கண்டுபிடித்த
சில பொருள்கள் வருமாறு :

மூங்கில் மரக்கால், படி, நாழி, உழக்கு, போர்க்கருவி, பெட்டி, வீடு, வேலி, முரம், கூடை முதலியன செய்தனர். தமிழர் மூங்கில் வேலையிலும் ஆரியர் தோல் வேலையிலும் சிறந்தோர் எனக் கூறப்படுகிறது.

இரும்புத் தொழிற்கருவிகள் உலகில் முதலில்
கண்டுபிடித்தோர் திராவிடத்தமிழர்களே ஆவர்

திருக்குறளின் செய்யுள் : "கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம்" இங்கு "அரம்" என்பது (file) இராவும் கருவியாகும். அது எஃகினால் (steel) செய்யப்படுவது. இரும்பு முதலியவற்றை இராவுவ தற்கு எஃகு இரும்பால் பல்லாயிரம் ஆண்டின்முன் கண்டு பிடித்துச் செய்தவர்கள் திராவிடத்தமிழர்களே ஆவர்.

அரம் முதலிய தொழிற்கருவிகளைக் குறித்துத் திருக்குறளைப்போல் 2000 ஆண்டிற்குமுன்பே உலகில் பிற நூலில் குறித்திருப்பது அரிது.

மெக்சிகோ (Mexico) அமெரிக்காவில்
திராவிடத்தமிழர்கள் குடியேறியது

அமெரிக்காவில் அழ்தெக் (Aztec) Backgammon game, Patoli ஆகிய நாகர்கள் (Red Indians) சிவமதத்தைச் சேர்ந்தோராவர். அவர்கள் வணங்கும் சிவச்சிலையின் நெற்றியில் முக்கோட்டுத் திருநீறுபோடப்பட்டிருக்கிறது இவர்கள் (Aztec) மக்கள் தாம் குமரிக்கண்டம் கடல்கோட்படுவதன் முன்னே தாம் வழிபட்ட சிவசமயத்தோடு மெக்சிகோவுக்குச் சென்றனர். நிற்க,

ருமேனியா (Rumania) மொழியிலும் தமிழ்ச்சொல் கலந்துள்ளது

ருமேனியாநாட்டிலே பணம் என்ற சொல் வழங்குகின்றது. அதாவது, "(Bano) A nominal coin of Rumania" பனே என்னும் சொல் பணம், காசு என்ற திராவிடத்தமிழ் மொழியின் மரூஉ ஆகும்

Babylon City B. C. 600 year (from Harmsworth Encylopedia)

பபிலொனியன் (Babylon) என்னும பழங்குடிமக்கள் தாம் சுமேரியரே ஆவர். சுமேரியன் அவர்கள் துரேனியன் மொழி பேசினர். துரேனியன் என்னும் மொழி பண்டை முதல் தமிழ்ச்சங்கத்தின் முன்பு வழங்கிய திராவிடத்தமிழின் வழிமொழியே ஆகும். அவர்கள் யூதர்களின் பழக்கம், வழக்கம், தோற்றம் என்பவற்றிற்கு முற்றும் மாறுபட்டவர். சுமேரியரின் கலையறிவு துவக்கமும் பபிலோனியாவின் முற்பட்டனவாகும். பபிலோனியாவிலே நகரம் பட்டினங்களின் பெயர், ஊர் (Ur), ஊர்ஃபா (Urfah) எனவும், சுருபாக் (Shurupak) சிறுபாக்கம் எனவும், (Eridu) ஏரிடு எனவும் வழங்குகின்றன,

திராவிடத்தமிழர்கள் தொல்காலத்தில் எகிப்துநாட்டிற்குக் குடியேறியது

குமரிநாடு கடல்கோள்படுவதன் முன்னரே அங்கிருந்து திராவிடர்கள் ஒரு பெருங்கூட்டம் புறப்பட்டுச் செங்கடல் வழியாகச் சென்று எகிப்துநாட்டில் போய் அங்குள்ளோரை வென்று அங்கு ஓர் கோச்சியம (அரசாங்கம்) நிறுவினர். அது எகிப்துநாட்டின் முதல் மன்னர் மரபாயிற்று. அதன் வரலாறு பின்வருவனவற்றால் அறிக.

The first civilization of Egypt

From Harmsworth Universal Encyclopedia

" For some century before the 1st Dynasty, a fresh race had been permeating the country at last a body of about a tenth of the numbers of the male population ent=red Egypt as a conquerors, they seem to have started across the desert road from redsea to Koptus they were of a higher civilization. Than the natives bringing with them the elements of writings and a great artistics skill, as well as some organisation. They held up Egypt at first centreing at Hiera Kompolis 40 miles south of Thebes) they were the successors of the first dynasty". நிற்க,

ஆங்கிலேயப் பேராசிரியர் வெல்ஸ் (Professor H. G. Wells) என்பார் "A short history of the World" எழுதிய நூலிலே திராவிடர்களும், எகிப்தியரும், சுமேரியரும் ஒரு பழங்குடி பெருமக்கள் எனவும், எகிப்தியரும் சுமேரியரும் இந்தியாவினின்று எகிப்துநாட்டில் வந்து குடியேறிய மக்கள் எனவும் கூறினர். அன்றியும், இவ்வையகம் அடைந்துள்ள துங்கம் (நாகரிகம்) அனைத்திற்கும் ஊற்றுப்போன்ற திராவிடத் தமிழர்களின் நாகரிகத்தினின்று தோன்றினவாகும் என்றார். இமேற்கோள்களால் திராவிடத்தமிழர்களின் உலகிலேயே முதன்மையான உயர்ந்த அறிவுடைய மக்கள் என்பது மெய்ப்பிக்கப்பட்டது. நிற்க,

யூதம் (Hebrew) மொழியில் தமிழ்ச்சொற்கள் கலந்திருப்பது பின்வருமாறு காண்க :

தமிழிலே, சால்பு — என்பது மாட்சிமை, மேன்மை, கல்வி எனவும், சான்றாண்மை — என்பது ஞானம், ஊக்கம் எனவும், சான்று — என்பது ஒப்பனை, சாட்சி எனவும், சான்றோர் — என்பது அறிஞர், நன்னெறியாளர் எனவும்,

சான்றோர் ஆட்சி — என்பது சான்ருர் வழக்கு என்பதும் வழங்கப்படும் தமிழ்ச்சொற்கள் பாலிமொழியில் சாது என வழங்கியது. புத்தரின் சமயத்தோர் கி. மு. 300 ஆண்டில் அதாவது, இற்றைக்கு 2266 ஆண்டின்முன்னே பலஸ்தீனம் (Palestine) முதலிய மேற்குநாட்டில்சென்று புத்தசமயத்தைப் புகட்டினர். அதனுல் பாலிசொற்களும் வழக்கங்களும் பரவின.

யூதச்சட்டத்தையும் கொள்கைகளையும் விளக்கும் யூதத் தலைவர்கள் "சாதுகிஸ்" (Sadducees) எனக் கூறப்படுவர். The priestly rulers of Judaism known as "Sadducees" the interpreters of Mosaic Laws" யூதர்களும் ஆரியர் ஆவர். யூதரினின்று ஆரியர் தோன்றினர் என்று வரலாற்றின் ஆசிரியர்கள் கூறினர். நிற்க,

ஓம் என்னும் ஓங்காரச்சொல்
தமிழின் மறைமொழியாம்

திருப்புகழில் ஓதப்படுவது: "கொன்றைச்சடையார்க்கு ஒன்றைத்தெரிய கொஞ்சித்தமிழால் பகர்வோனே" என்பதனுல் அறிக. தமிழ்மொழியே கடவுளின் மொழி, தெய்வ மொழியாகும் என்பது அறிக.

அயன், மால், சிவன் முதலோரும் தமிழ் பேசினர். இந்திரன், குபேரன் முதலோரும், தாருகன் இரணியன் முதலோரும், அன்னர் அகத்தியர் மார்க்கண்டேயர் வான்மீகர் கவுதமர் சுகர் வசிட்டர் காசிபர் முதலோரும் தமிழ்நூற்கள் செய்தவராவர். சனகர் சனற்குமாரர் முதலோரும் தமிழ் நூல் ஆராய்ந்தோர் ஆவர். (மொழிநூல்)

வசிட்டர், காசிபர் முதலோரும் தமிழ்நூல் செய்தவராவர். சனற்குமாரர் முதலோரும் தமிழ்நூல் ஆராய்ந்தோர் ஆவர். (மொழிநூல்)

ஆரியர் இந்தியா வருகை

ஆரியர் (பார்ப்பனர்) நாடோடிகளாய்க் கி. மு. 2500 ஆண்டில் ஆசியாவின் வடமேற்றிசையிலிருந்து சிந்து ஆற்றுக்கு அருகாமையில் வந்து குடியேறினர். வளமான நாடு ஆதலால் பல ஆண்டு அங்கு தங்கினர். அக்காலத்திற்கு முன்னமே திராவிடத்தமிழர்கள வடக்கே கைலாயமலைகாறும் வாசஞ்செய்தனர். திராவிடவேந்தர் அங்கு அரசாட்சி புரிந்தனர். பாஞ்சாளநாட்டை "பிரவாகன சைவலி" என்னும் வேந்தர் அரசாண்டார் அவர் திராவிடத்தமிழரே ஆவர். அவர் பெரியதோர் கல்விக்கழகம் (University) கட்டி நடத்தினர்.

அந்தப் பல்கலைக்கழகத்தில் வந்து பயில்வோர்க்கு உணவு, உடை முதலியன வழங்கினர். அந்தக் கழகத்தில் கௌதமர் முதலிய ஆரிய முனிவர்கள் தமிழருடைய அரிய தத்துவஞானங்களைக் கற்றுணர்ந்தனர். இதுபற்றிச் சாந்தோக்கிய உபநிடதம் 5-வது, பிரபாகடம் 3-வது கண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது. (மொழிநூல்)

ஆரியர் இந்தியாவிற்கு வரும்போது இருக்குவேதத்தோடு மட்டும வந்தனர். இருக்குவேதத்திலுள்ள சொற்கள் மட்டும் ஆரியமொழியில் இருந்தன. அதற்குப் பின், ஆரியமொழியில் சேர்ந்த சொற்கள பாலிமொழியினின்று வந்தனவாம். முதல் திராவிடமொழியினின்று பாலிமொழி தோன்றியது. அன்றியும், பாகதம் என்னும் இயற்கையான முதல் திராவிடமொழியினின்று சங்கத்தமிழும் பாலியும் தோன்றின பேருயிர்க்கடவுள் சிற்றுயிர்கள் என்னும் தத்துவப்பொருள் பல தமிழரின் கழகங்களாலும் நூல்களாலும் தெரிந்த பின்பே இந்தியாவில் பிறந்து வளர்ந்து கற்ற ஆரியர்கள் உபநிடதம் பல இயற்றலாயினர். அவற்றுள், தசோபநிஷத் எனும் பத்து உபநிடதமே

சிறந்தன என்று ஆன்றோர் கூறுவர். அன்றியும், ஆரணியங்களையும் இயற்றினர். நிற்க,

வசிட்டர், காசிபர், தவத்தான யோகியர். அகத்திய மாமுனி இடைக்காடர், கீரனும் வகுத்த பாவினிற்பொருட் கோலமாய் வரும் முருகோனே என்னும் திருப்புகழ்பாடலால் தொல்காலத்தில் ஆரிய முனிவர்கள் தமிழ்த்தத்துவநூல் முதலியவற்றைக் கற்று ஆராய்ந்தனர். அன்றியும், "சனகற்கும் அகத்திய புலத்தியசனற்குமாரர்க்கும் அனுக்கிரகமெய்ப் பலகைச் சதுபத்து நவப்புலவர்க்கு-விபத்தியில் ஞானபடலத்துறு லக்கண இலக்கிய தமிழ்த்திரய மத்திலகப் பொருள் விர்த்தியினைப் பழுதற்றுணர்வித்தருள் வித்தகசற்-குருநாதா" திருப்புகழ் 133வது (மொழிநூல்) என்பதனல் புலத்தியர் முதலோரும் தமிழ்மொழியில் அக்காலத்திருந்த உயரிய நூற்களைக் கற்றனர் என்பது அறியலுற்றும். ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்னும், வந்த காலத்திலும் தமிழ் அறிஞர்களால் ஓலைச்சுவடியில் எழுதப்பட்ட அறிவுநூல்கள் ஒன்று அல்லது இரண்டு கையிருப்பில் இருந்தன. அவை பிற்றைக்காலத்தில் ஆரியரால் மறைக்கப்பட்டன; அழிக்கப்பட்டன.

ஆரியர் இந்தியாவில் குடியேறிய நீண்டகாலம்வரைக்கும் பழந்திராவிடமொழியினையே பேசினர். அத்தினபுரியை இராசதானியாய்க் கொண்ட குருநாடும், திரிதராட்டிரன் ஆரியனை காந்தாரநாட்டுவேந்தனின் மகளாகிய காந்தாரியை மணந்த பின்னரும் திராவிடநாடாகவே இந்தியா இருந்தது. பிறகு, அக்காந்தாரியின் குலமொழியாகிய ஆரிய மொழியே அரண்மனை மொழியாகி நாளடைவில் வளர்ச்சி பெற்றமையின் அந்நாடு ஒரு சார்புள்ள ஆரியநாடுபோல்வதாயிற்று. (தமிழ்மொழி நூல்)

"மன்னர் மன்னனுகிய சனகர் தம்மைக் காணவந்த சுவேதகேது, ஆருணேயர், சோமேசுசுமர் சத்பபஞ்ஞர், யாக்ஞுவல்கியர் என்னும் ஆரிய முனிவர்களை நோக்கி, நீவிர் அக்கினி ஒத்திரத்தை எவ்வாறு செய்வீர்கள் என வினவி நிற்ப, அதற்கு யாக்ஞுவல்கியர் சிறிது பொருத்தமாகவும், ஏனைய மூவரும் சிறிது பொருந்தாமலும் விடை கூறினர். சனகர் இவ்வளவுதானே என்று இகழ்ந்து சனகர் தேர்மீது ஏறிச் சென்றனர்.

"மற்றை மூவரும் நின்றுவிட, யாக்ஞுவல்கியர் மட்டும் அன்னுர் தேரோடு சென்று அதன் உண்மைப்பொருளைச் செவியுற்றுத் தெளிந்தனர். அது முதல் சனகர் பிராமணனுக அவரால் மதிக்கப்பட்டனர் எனச் சதபாதப் பிரமணம் என்னும் புத்தகம் கூறுவதால் அச்சனக மன்னர் தமிழ்வேந்தர் எனவும், அன்னுர் நாடும் தமிழ்நாடு எனவும் கலைவல்லோர் கருத்தாம். "அறிவு விளக்கம் 22-வது நூல் 4-வது சஞ்சிகையில் எழுதப்பட்டது". ஆரியர்க்குமுன்னே உயரிய துங்கம் (நாகரிகம்)எய்தியஎகிப்து(Egypt)நாட்டுநூல்களும்திராவிடர்களின் துங்கத்தைப் பாராட்டிக கூறியிருக்கின்றன. (மொழிநூல்). நிறக, ஆசியாகண்டத்திலும், யுரோபியாகண்டத்திலும் ஆரியம் தோன்றுமுன்னே தமிழ்போன்றதோர் மூலத் திராவிடத் தமிழ்மொழி பரவி உலகில் வழங்கியது என்பது மொழி ஆராய்ச்சியில்வல்ல யுரோப்பிய நிபுணர்கள் கூறினர் என மனோன்மணியம் பேராசிரியர் சுந்திரம்பிள்ளை கூறினர். இவர் M, A., B. L., படித்து மனோன்மணியமும், தமிழ்விடு தூதும் இயற்றியவர்.

பேரறிஞர் வின்ஸ்லோ (Rev. Vinslow) என்ற கலைஞர் தம் ஆராய்ச்சியில் கண்டவற்றைப் பின்வருமாறு எழுதினுர். அதாவது, உலகத்திலுள்ள மொழிகள் ஒவ்வொன்றிற்கும் உள்ள இயைபுகளை அறிஞர் கால்டுவேல் (Rev. Caldwel) எடுத்துக் கூறியபடி ஆராயின், ஒரு மொழியிலிருந்து எல்லா

மொழிகளும் தோன்றின என்பது விளங்கும் எனவும், பல்லாயிரம் ஆண்டிற்குமுன் இந்தியாவினிடையிலுள்ள ஓர் வகை மொழி சிறிது திருந்தி வடபாலில் வடமொழி எனவும், தென்பாலில தமிழ் எனவும் பெயர்பெற்றது. பழைய பாலி எழுத்திலிருந்து ஆரிய பிரம்மி எழுத்து தோன்றியது என்று அறிஞர் டெய்லர் (Rev. W. Taylor) தம் கொள்கையை ஒட்டிப் பாலிமொழிக்குப் பிரம்மி பிற்பட்டது. அதன் திருத்தம் ஆரியம் எனவும். வடமொழி எழுத்துள்ள நாணயங்களிலும் கல்வெட்டுக்களிலும் பல நூறு ஆண்டுகள் முற்பட்டன என்பது அறிஞர் சைக்கேஸ் (Colonel Sykes) என்பவரின் கொள்கை எனவும் அறிஞர் வின்ஸ்லோ கூறினர். பாகதம் என்பது இந்தியநாட்டிற்குப் பொது மொழியாகும். அதாவது 12,000 ஆண்டுக்குமுன் (முதல் தமிழ்ச்சங்கத்திற்குமுன்பு வழங்கிய தமிழ்மொழியாகும். (மொழிநூல்) பேராசிரியர் காத்திகேயனார்)

Rev. R. Caldwell, L. L. D. அடிகளார் கூறியது

வடமொழிக்கு முற்பட்டது தமிழ்மொழி எனவும் இத்தாலியா தேசத்திலே பல நூற்றுண்டுகளுக்குமுன் திராவிடர்களுக்குத் தொடர்புடைய இனத்தார்கள் இருந்தனர் எனவும் அறிஞர் கால்டுவேல் கூறினர். (மொழிநூல்)

Proffessor Edward Claurd தம் நூலிலே கூறியது

பேராசிரியர் எட்வர்டு களார்டு தாம் இயற்றிய யூதரின் வரலாற்றிலே மங்கோலியர், ஃபின்லாண்டர் (Finlanders) என்னும் இந்த வகுப்பார்க்கு மூலமனிதர்களாக இருந்தோர் ஈழைநாட்டிலிருந்து (இலங்கையிலிருந்து) பாரசீகவளை குடாவைச்சூழ்ந்த நாடுகளில் குடியேறினர்கள் எனவும். சுமெரியர் என்ற இனத்தார்க்கு முன்னும் எகிப்துநாட்டினர் ஓங்கும் முன்னும் அவர்கள் நகரங்களையும், இராசதானிகளை

யும் உண்டாக்கினார்கள் எனவும், இந்த இராசதானிக்குப் பெயர் 'ஊர்' எனவும், "பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துள்ள கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன என்று தமிழ்மொழி வரலாறு" என்னும நூல் கூறும். புத்தமதம் இலங்கைக்குவர 2266 ஆண்டிற்குமுன் அங்கிருந்த இராவணேசுரரைச் சேர்ந்த திராவிடத்தமிழர்கள் ஈழநாட்டிலிருந்து பாரசீகவளைகுடாவைச்சேர்ந்த நாடுகளில் குடியேறினார்கள் என்பது கருத்தாகும்.

திராவிடரும் ஆரியரும் திரிமூர்த்தியும்

பேரறிஞர் இரவீந்திரநாத்டாகூரால் எழுதப்பட்டது

ஆரியர் இந்தியாவுக்கு வந்தகாலம் இருக்குவேதகாலம் ஆகும். அதாவது, இற்றைக்கு 4500 ஆண்டாகும். அப்போது க்ஷத்திரியர், பிராமணர் என்னும வகுப்புமட்டும் அவர்களுக்குள் இருந்தன. வைசியர், சூத்திரர் என்ற வகுப்பு இல்லை. விசுவாமித்திரரைத் தலைவராய்க்கொண்ட குழுவினரும வசிஷ்டரைத் தலைவராய்க்கொண்ட குழுவினருமாக மாக இருவகைப்பட்டனர். அக்காலத்திலே திராவிடர்களுக்குச் சிவம் தெய்வமாகவும், க்ஷத்திரியர்களுக்கு விஷ்ணு தெய்வமாகவும், வேதியர்க்குப் பிரம்மா தெய்வமாகவும் வழங்கப்பட்டனர். சிவம், விஷ்ணு, பிரமா எனத் திரிமூர்த்திகள் என்னும் பெயரால் இற்றைகாறும் வழங்கப்படுகின்றனர். அக்காலத்திலே க்ஷத்திரியர்களுக்கும் வேதியர்களுக்கும் சண்டை சச்சரவு நிகழ்ந்தன. திராவிடர்களுக்கும் ஆரியர்களுக்கும் சண்டை சச்சரவுகள் நிகழ்ந்தன. பிறகு, சமாதானப்பேச்சு நடந்தது.

திராவிடத்தமிழர்களும், க்ஷத்திரியர்களும், வேதியர்களும் ஒன்றுகூடிப் பேசி ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டனர். அதாவது, எதிர்காலத்திலே அம்மூவினத்தாரும் அம்மூர்த்திகளையும் வணங்கிவழிபடல் வேண்டும் என்று

தீர்மானித்தனர். திருநீறும், திருநாமமும் அத்திருமூர்த்திகளைப் போற்றும் சின்னமாக நெற்றியில் தரித்தல்வேண்டும் எனத் தீர்மானித்துக்கொண்டனர். அம்மூன்று படுக்கல் கோடும், நெடுக்கல்கோடும் இக்காலத்திலும் வெவ்வேறு கருத்தில் வழங்கப்படுகின்றன. அத்திரிமூர்த்தி மதம் பிறகு ஒடுக்கப்பட்டது. அதற்கு மாருகப் பௌராணிகமதம் என்பது ஒரு மதத்தைப் புகுத்திவிட்டு இராமன், கிருஷ்ணன்களைத் தெய்வம் எனச் செய்து ஓயாது பிரசாரம் பார்ப்பனரால் செய்யப்படுகின்றது. பௌராணிகமதம்பற்றி இந்த நூல் வேறு இதழில் காண்க.

கடவுள் என்ற அரிய இறைமைப்பொருளை முதலில் கண்டுபிடித்தவர்கள் திராவிடத்தமிழர்களே

கடவுள் துணை — கடவுடுணை — கடவுட்டுணை என்று எழுதுவது பண்டைக்காலத்தமிழரின் வழக்கமாம். கடவுள் எனற சொல்லுக்கு விளக்கமாவது: கட – கடந்த, உள் – உண்மைப்பொருளாம். கட–கடந்த என்பது ஆராய்ச்சிக்கு முடிவு இல்லாத அரும்பொருளாகும். உள் என்பது உண்மைத் தத்துவப்பொருளாம். இக்கருத்தால் ஒரு பேருயிர்க் கடவுள் ஒன்றுண்டு என்று முதலில் கண்டுபிடித்தவர்கள் திராவிடத்தமிழர்களே ஆவர் என்பது அறியலுற்றும். ஆதலால், உலகிலுள்ள திராவிடத்தமிழர்களும் மற்றையோர்களும் உருவம் கடந்த கடவுளையே வணங்கி உய்வார்களாக. கல்சிலை, வார்ப்புச்சிலை, மரச்சிலை, மண் சிலை, ஓவியச்சிலை முதலான உருவங்களைத் தெய்வம எனக கருதி வணங்கலாகாது. அவ்வாறு வணங்குவது நாத்திக வணக்கமாகும். மறமும் (பாபமும) ஆகும்.

திராவிடத்தமிழர்களின் மதங்கள்

சிவமதம் (சைவமதம்) இது கைலாயமலைக்கு அருகாமையில் சிவபெருமான், திருநந்திதேவர் முதலியோர்களால்

உண்டாக்கப்பட்டது. முருகவேல்மதம் (கௌமாரம்) கடல் கோளால் மூழ்கிய குமரிக்கண்டத்தைச் சேர்ந்த மாமதுரையிலே தோன்றியது. கணபதிமதம் (காணுபத்தியம்) பஞ்சதிராவிடமாகிய மகாராட்டியத்தில் தோன்றியது. அம்மன் - சத்தி மதம் (சாக்தேயம்) இம்மதம் மோகன்ஜோடாரோ என்ற நகரத்திலே பாகிஸ்தானில் இருக்கிறது. அத்தெய்வம் முக்கண்மாதா என்று வழங்கியது. விஷ்ணுமதம் (வைஷ்ணவம்) சூரியமதம் (சௌரவமதம) என்பன ஆரியரின மதமாம. ஓம என்னும் ஓங்காரத்தின் எழுத்து தும்பிக்கையுள்ள யானை ஓம் முகத்தை ஒத்திருப்பதால் யானைமுகத்தோன் என்ற தெய்வம் கற்பித்துவழிபடலாயினர். ஆரியர் இந்தியாவுக்கு வர வெகுகாலம்முன்பே மோகன்ஜொடாரோ தோன்றியது. கடவுள் எலலா உலகங்களுக்கும் முதல்வராவர். உயிராய், அறிவாய், எலலாவற்றிற்கும் ஆதாரமாய் இருப்பவர். அவ்வாறன்றி, இராமனும் கிருஷ்ணனும் பிறந்து இறந்தவர்கள் ஆவார்கள். மாந்தர்படும் பாடுகள அனைததும் பட்டவர்கள். சீதையைத் தாம் மீட்க இயலாமல் அனுமாா முதலிய திராவிடர்களால் மீட்டார். ஆதலின், இராமன கடவுள் அல்லர் என்பது புலனாகும். இறைவரை வணங்கினால் நற்பலன் உண்டாம். இராமனையும் கிருஷ்ணனையும்போன்ற மனிதரையும் வணங்கினால் எவ்வகை பலனும் கிடையாது.

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றவாறு எதையும் ஆராய்ந்து அறிந்து ஒழுகல்வேண்டும். ஒரு மனிதனை விஷ்ணு அவதாரமெனச் சொன்னால், அஃதெப்படி எனப் பகுத்தறிவால் பின்வருமாறு ஆராய்தல வேண்டும. பிறபபும இறப்பும இலலாததும், எங்கும நிகழ்வதுமாகிய பொருளே விஷ்ணு பரமாத்துமாவாகும். விஸ்வநாதர் என்பதும் விஷ்ணு என்பதும் நிறைந்த பொருளைக் குறிப்பதாகும். ஆதலின், அவதாரிகள் என்பார் பிறந்து இறந்தனர். ஆதலின், அவர் இறைவர் அல்லர் என்பது புலனாகும். இறைவர் அல்லால பொருளை

வணங்குவது நாஸ்திகம் ஆகும். ஆதலின், "மெய்ப்பொருள் காண்பது அறிவு; பொய்ப்பொருள் காண்பது மடமையாம்" ஆராய்ந்து நடக்கின் அல்லல் இல்லை. ஆராயாது நடக்கின் அல்லல் உண்டாம்; வாழ்க்கை வீணாகும். நிற்க, இலவன் குசலவன் என்னும் இருபிள்ளைகளும் இராவணேசுரர்க்குத் தரித்த பிள்ளைகள் என்ற நம்பிக்கையால் சீதை கற்பினின்று வழுவினர் எனக் கருதிப் பெருங்குழிவெட்டி அதில் சீதையை இறங்கச் செய்து, மண்ணால் மூடிவிட்டார்கள். வடநாட்டார் தாம் தென்னாட்டு திராவிடர்களின்மீது பகைமையும் வேற்றுமையும் பெருக்குகிறார்கள்.

இராமாயணம் நடந்தகாலந்தொடங்கித் தென்னாட்டாரைப் பற்றிப் பின்வரும் கருத்துகள் வடநாட்டுமக்களுக்குள்ளே உண்டு. அதாவது, இலங்கைநாடு முதலாகத் தெலுங்குநாடு, மைசூர்நாடு, மலையாளநாடுவரைக்குமுள்ள மக்கள் அனைவரும் இராவணேசுரரின் இனத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் இராட்சததன்மையுடையவர்கள் எனவும் கருதுகிறார்கள். ஆதலால், தென்னாட்டார் மீது வெறுப்பும், மதியாமையும், வேற்றுமையும் வடநாட்டார்க்கு உண்டு. அன்றியும், வடநாட்டில் தெல்லி (Delhi) முதலிய ஊர்களில் 'ராம்லீலா' என்னும் விழாவை ஆண்டுதோறும் நடத்துகிறார்கள். அவ்விழாவில் தென்னைமரம் உயரத்தில் இராவணேசுரரின் உருவத்தைப்போல் மரத்தால் சிலைசெய்து நிறுத்தி இராமாயணக் கதையைச் சொல்லி அதன் பின்னர், தென்திசையிலே இருந்த இராவணேசுரரைக் கொளுத்துவோமாக எனச் சொல்லி அங்கு நிறுத்திய மரச்சிலையில் தீ வைத்துக் கொளுத்துவார்கள். அப்போது வெறிகொண்டு ஆரவாரஞ்செய்வார்கள். ஆதலின், ஷ விழாவால் இராவணேசுரர் மீதும், தென்னாட்டார்மீதும் மறவாத வெறுப்பும் பகைமையும் உண்டாகின்றன. ஆதலின் "ராம்லீலா" விழா வடநாட்டிலே ஒழிந்தால்தான் தென்னாட்டார்மீதுள்ள வெறுப்பும், பகைமையும், மதியாமையும் ஒழியும். அப்போது தான் தென்னாட்டாரும் வடநாட்டாரும் வெறுப்பும் எதிர்ப்பும்

நீங்கி, ஒற்றுமைப்படுவார்கள். அன்றியும், ''ராம்லீலா''வும் ''கிருஷ்ணலீலா''வும் முதற்கண் பௌராணிகமதம் தோன்றி னதற்கான கூற்றுகளில் (காரணங்களில்) முதன்மையாகும். இதனைப் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்வாம்.

திராவிடத்தமிழரான இராவணேசுரரின் வரலாறு

இந்தக் கட்டுரை வான்மீகரின் இராமாயணத்தின்படி எழுதியது: மேன்மைமிக்கவரும், சிவப்பற்றுடையவரும பத்துத் தலைக்குரிய அறிவுடையவரும், இருபது கைகளின் வலிமையுடையவரும், பண்டைக்காலத்தில் கீர்த்திபெற்ற திராவிடத்தமிழர்களின் மரபைச்சேர்ந்தவரும் ஆகிய இராவணேசுரர் சிறந்த திராவிடத்தமிழ்வேந்தரே ஆவர். தண்டகாரணியத்திலே வாழ்ந்த அனுமார், வாலி, சுக்கிரிவர் முதலானவர்கள் திராவிடத்தமிழர்களே. அவர்கள் குரங்கு அல்லர். அவர்களோடு இராமன், இலட்சுமணன் முதலியவர்கள் பண்டைத்திராவிடத் தமிழ்மொழியில் பேசினார்கள். மேற் கூறப்பட்ட இலங்கைவாசிகளும், தண்டகாரணியத்தின் வாசிகளும், அவர்களின் முன்னோர்களும் ஒரே திராவிடத் தமிழர்களின் இனத்தைச்சேர்ந்தவரே ஆவர். அவர்களின் முன்னோர்கள் வணங்கிய தெய்வம் சிவமேயாகும். ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்னே இந்தியா நாடு முழுமையும் திராவிடத்தமிழர்களே ஆண்டார்கள். நிற்க, பஞ்சவடி தண்டகாரணியம் முதலிய நாடுகளுக்கு மங்கையர்திலகம் சூர்ப்பனகையார்தாம் அரசியாவார். இவ்வம்மையார் சீதை, இராமன், இலட்சுமணன் முதலியோர் பஞ்சவடிக்கு வந்திருந் ததைக் கேள்வியுற்று,

சீதையைப் பார்த்து ஆறுதல் உரையாற்றற்குப் போனார். அவ்வாறன்றிப் பலர் முன்னிலையில் காதல்பேச வந்தவர் அல்லர். சூர்ப்பனகை அரசியார் இலட்சுமணன், இராமன்களிடத்தில் காதல்கொண்டதால் சூர்ப்பனகையின்

மூக்கையும் காதையும் அறுத்து மானபங்கஞ்செய்தார்கள் என்று வான்மீகி இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இச்செயலை ஆராய்வாம். அவ்வாறு மானபங்கஞ்செய்யாமல் வார்த்தையால் கண்டித்துவிடலாம் மானபங்கஞ்செய்தது காதல் காரணம் என்று தோன்றவில்லை அவ்வாறன்றிச் சூர்ப்பனகையின் பேரழகைக் கண்டு காதலித்த இலட்சுமண னுக்கு இவ்வரசியார் இணங்காமையால், அவனை இலட்சும ணன் மானபங்கஞ்செய்திருக்கலாம் அன்றோ? அன்றியும், மகளிர்களுக்கு அழகு பயப்பது காதணியும் மூக்கணியும் ஆகும். அன்றியும் வைரம், பச்சை, சிவப்புக்கல், தங்கம் கொண்ட மூக்கு அணி, காது அணிகளை அணிந்துபோனதால் அவ்வழகிய தோற்றத்தில் பொருமைகொண்டு சூர்ப்பனகை யின் மூக்கையும் காதையும் அறுத்து மானபங்கஞ்செய்தார் கள். மற்றவர் பிடித்து ஒருவர் அறுத்திருக்கவேண்டும். அச்செயல் மனிதத்தன்மையற்ற கொடிய செயலாகும். அதற்கு ஒரு ஒப்பனை சொல்லுவன் கேண்மின்! இருநூறு ஆண்டிற்குமுன்னே திருச்சிராப்பள்ளியிலே அரசுபுரிந்த நாயக்க அரசியார் தம் காதல் விருப்பத்தைப் பல தடவை தாயுமானசுவாமிகளிடத்தில் தெரிவிக்க, அதற்குச் சுவாமிகள் பல சமாதானம் சொல்லியும் அவ்வரசியார் கேளாமையால், தாம் செய்த அமைச்சர் வேலையினின்று விலகி இராமநாத புரத்திற்குப் போய் அரண்மனையில் தங்கினார்கள். அதன் பின், திருச்சிராப்பள்ளிக்குப் போகவில்லை. இதனால் நாம் அறிவது என்னவெனின், தாயுமானசுவாமிகளின் செயல் தெய்வத்தன்மை பொருந்தியதாகும். இராமனின் செயலோ எனின் காட்டுமிரண்டிச் செயலாகும். நிற்க, தாயுமான சுவாமிகள் தாம் என் சம்பந்தி சர்தார் வேதரத்தினம் கிழாருக்கு ஆருவது தலைமுறையின் உறவினர் ஆவர்.

சூர்ப்பனகை அரசியார் தம்மை இராமன், லட்சுமணன் முதலியோர் மானபங்கஞ்செய்த கொடுமையைத் தம் அண் ணன் இராவாணசுரரிடம் போய்ச் சொன்னதைக் கேட்டு

அவர் உலகில் யாரும் செய்தில்லாத இக்கொடுமையைக் கேட்டு மனம் வருந்திப் பழிவாங்கும் எண்ணம் உண்டாகி, அறிவு கற்பிக்கும்பொருட்டுத் தாம் ஆகாயவிமானத்தில் ஏறிப்போய்ச் சீதையைத் தூக்கிக்கொண்டு தமது அரண்மனையில் வைத்துக்கொண்டார். தாம் சிவபற்றுடையவராதலின் சீதையின்மீது எவ்வகை பழியும் வாங்கவில்லை. அன்புடனும் மிகுந்த உபசாரத்துடனும் அருமை பாராட்டி வைத்திருந்தார். அங்கிருக்கும்போது சீதை கருப்பவதியானார். நிற்க, அனுமார் வாலி சுக்கிரீவன் முதலியவர்கள் இராவணேசுராக்த உறவினர் ஆவார்கள். அவர்களைக் கொண்டு சீதையை மீட்கலாமெனக் கருதி, இராமன் இலட்சுமணன் முதலியோர் வந்து அனுமாரிடம் சீதையை இராவணேசுரன் ஆகாய விமானத்தில் வந்து தூக்கிக்கொண்டுபோன செய்தியைச் சொன்னார். அதற்கு அனுமார்போய்ச் சீதையை மீட்டுக் கொண்டு வருவதாகவும் வாக்களித்து, அதற்காக ஓர் உதவி செய்யவேண்டும் எனக் கேட்டு வாலியை ஆட்சியினீக்கிச் சுக்கிரீவனுக்குப் பட்டங்கட்டவேண்டும் எனக் கேட்டார். அதற்கு இராமர் இணங்கினார். ஒரு நாள் இராமன் மறைவாயிருந்து வாலியைக் கொன்று, பிறகு சுக்கிரீவனுக்குப் பட்டங் கட்டினார். அதற்குப்பின், இலங்கைக்குத் தேடப்போன ஆள் (சடாயுவின் அண்ணன்) வந்து சீதை இலங்கை இராவணேசுரரின் அரண்மனையில் இருப்பதைச் சொன்னான். அவனை இராவணேசுரரும், அரண்மனையின் காவலர்களும் நன்கு அறிந்திருப்பதால் யாதொரு தடையுமில்லாமல் அவன்போய்ச் சீதையைப் பார்த்துவர உத்திரவு அளிக்கப்பட்டான். அனுமான் இராமரின் கணையாழிமோதிரத்தைக் கொண்டு போய்ச் சீதையிடம் கொடுத்துச் சீதையிடமிருந்த மோதிரத்தைப் பெற்றுக்கொண்டுவந்து இராமரிடம் கொடுத்தான். யாதொரு தடங்கலும் இல்லாமல் இராமனதும் சீதையதும் மோதிரங்கள் மாற்றப்பட்டதால் ஒற்றுமையும் சமாதானமும் நிலைத்திருந்ததால் இலங்கைக்குப் போய்ச் சண்டைபோடத் தேவையில்லை.

இதில் ஓர் ஆராய்ச்சி செய்தல்வேண்டும். அதாவது, வாலியோடு சமாதானம் பேசிக்கொண்டு சுக்கிரீவனுக்கு வேந்தன் பட்டங்கட்ட இயலாத அனுமார் முதலியவர்கள் இலங்கைக்குப் போய்ப் மோர்புரிந்து சீதையை மீட்டது எங்ஙனம் இயலும்? அனுமார் – தாம் இலங்கைக்குப் போய்ச் சீதையின் மோதிரத்தைக் கொண்டுவந்து காட்டிய தால் சீதை அங்கு இருப்பது அறிந்து அதன்பிறகு இராவணேசுரரோடு சமாதானம் பேசிச்சீ தையை அனுப்புவதற்குச் சம்மதித்தார்கள். இராமன், இலட்சுமணன், அனுமான், சுக்கிரீவன் முதலியவர்கள் இராவணேசுரரின் அரண்மனையில் 7 நாள் நன்ருக உபசரித்துத் தங்க வைக்கப்பட்டார்கள். 8-வது நாள் சீதையை அன்புடனும் உதவியுடனும் இராவணேசுரர் அனுப்பிவைத்தார். இங்கு ஓர் ஆராய்ச்சி செய்யவேண்டும். முதலில் இரு படைகளும் சண்டை செய்ததாயும், பிறகு இராவணேசுரருக்கும் இராமனுக்கும் 7நாள் இரவும்பகலும் சண்டை நடந்து இராவணேசுரர் அடிபட்டு இறந்ததாயும் சொல்லப்படுகிறது. இரண்டு கட்சியின் படைகள் சண்டை செய்யாமைக்குக் காரணம் சொல்லவில்லை. இருதரப்புப் படையும் சண்டை செய்யாதபோது இராமனும் இராவணேசுரரும் சண்டை செய்யவேண்டிய தேவையில்லை உண்மையை மறைத்துக் கற்பனைக் கதை கட்டியது என்னவெனில் அதைக் கூறுவல் கேண்மின். மானங்கெட்ட தன்மையில் சீதையை அழைத்துவந்தார்கள் என்ற கெட்ட பெயரை மறைப்பதற்கு ஏதோ சண்டை செய்து வென்று சீதையை அழைத்துவந்தார்கள் என்றதற் பெருமை செய்ய வரலாற்றைத் திரிச்சியெழுதினதாகும். நிற்க, தண்டகாரணியத்திற்கும் இலங்கைக்கும் சுமார் 1000 மைல் தொலைவு இருக்கும். இப்போதிருக்கும் இலங்கையிலும் இராமன் காலம் 3000 ஆண்டுகளுக்கு முன்னே இருந்த இலங்கை பலமடங்கு பெரிதாகும். ஆதலின் அந்த இலங்கைக்கும் 1000 போர்வீரர்கள் போனதாக வைத்துக் கொண்டாலும், அத்தனை வீரர்களும் இலங்கைக்குப்போக

மிகுந்த நாளாகும். அவர்களுக்குக் கைக்குத்தல் அரிசி மூட்டை, பருப்புமூட்டை, எண்ணெய், காய்கறிகள், புலால் மீன் வகைகள், வழியில் தங்குவதற்குக் கூடாரங்கள் முதலி யன ஏராளமான அளவில் வேண்டப்படும். அவற்றைக் கொண்டுபோகப் பல வண்டி, மாடுகள், குதிரைகள் தேவைப்படும் அன்றோ ? இவ்வளவு தேவைப் பொருள் களை வழங்க அனுமார் சுக்கிரீவன்களால் இயலாது. ஆத லால், அனுமார், சுக்கிரீவன், இராமன் இலட்சுமணன் முதலி யவர்கள் பெரும் படைகொண்டு போகவுமில்லை, சண்டை செய்யவுமில்லை என்பது உண்மையாம். இராமனின் கணை யாழி மோதிரத்தை அனுமான் கொண்டுபோய்ச் சீதையிடம கொடுத்ததும், சீதையின் மோதிரத்தைக் கொண்டுவந்து இராமனிடம் கொடுத்ததும் பகுத்தறிவால் ஆராயின், அனு மான் எவ்வகையெதிர்ப்பும் தடையுமின்றி அரண்மனைக்குள் போய்வந்ததால் சண்டைசச்சரவுகள் எதுவும் நடக்கவில்லை யென்பது உண்மையாகும். ஆதலால் சூர்ப்பனகையின் மூக்கு அறுத்த கொடுமையும், சீதையை வானூர்தியில் கொண்டுபோன பழியும் சமாதானம் செய்யப்பட்டன. அத னால் இராவணேசுவரர் தாம் இராமன் இலட்சுமணன் அனு மார், சுக்கிரீவன் முதலியவர்களை 7 நாள் ஒற்றுமையுடன் விருந்து நடத்தி வந்திருந்து 8-ஆம் நாளில் சீதையை அனு மார் இராமர் முதலியவர்களோடு அன்புடன் அனுப்பிவைத் தார் என்பது நடந்த நிகழ்ச்சியாகும். இச்செயல் திராவிடத் தமிழர்களின் மரபின் வந்த பண்பாகும். இராவணேசுரர் வானூர்தியில் சீதையைக் கொண்டுபோனார் என்று சொல் லப்படுகிறது. இதனால் 3000 ஆண்டிற்கு முன்னே திரா விடத் தமிழர் ஆகிய இராவணேசுரரின் முன்னோர் வானூர்தி (ஆகாய விமான)த்தைக் கண்டுபிடித்து இயற்றினார்கள் என்பது பெருமைக்குரியதாகும். அன்றியும் திராவிடத் தமிழர்களுக்குப் பெருமையாகும். அந்த வானூர்தி காற்று விசையால் பறந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இது திராவிட மக்களுக்குப் பெருமையாகும்.

இராமர் 14 ஆண்டுகள் வனவாசம் முடிந்தபின்னே தாம் பட்டங்கட்டிக்கொண்டு அரசாட்சி புரிந்தார். அப்போது சீதை கருப்பவதியாய் இருப்பதைப்பற்றி அயோத்தியா மக்களின் எதிர்ப்பும் பழிச்சொல்லும் பெரிதாயிற்று. ஆதலால் சீதையை வால்மீகி ஆசிரமத்தில் போய்த் தங்குமாறு இராமர் அனுப்பினார். சீதை தான் வால்மீகரின் ஆசிரமத்தில இருக்கும்போது லவன்-குசன்என்ற இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். அக்குழந்தைகள் தனக்குப் பிறந்த குழந்தைகள் அல்லர் என்று இராமர் மறுத்தார். வான்மீகர் தாம் இராமன் வனவாசத்தில் நிகழ்ந்த வரலாற்றைச் சீதையால்அறிந்துகொண்டு வான்மீகர் தான் இராமாயணம எழுதினார். அந்த இராமாயணத்தை அந்த லவன்-குசன் என்ற பிள்ளைகளுக்கு கற்பித்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு இராமன் நடத்திய அஸ்வமேதயாகத்தின்போது இராமன் முன்னிலையில் வான்மீகர் தாம் இயற்றிய இராமாயணத்தை லவன்-குசன் பாடுவித்தார். இராமன் அதைக் கேட்டு மனமகிழ்ந்து அக்குழந்தைகளைத் தம் குழந்தைகள் என்று ஏற்றுக்கொண்டார். ஆயினும் அயோத்தியாவிலுள்ள மக்கள் சீதையையும் இராமனையும் பலவிதமாக் குற்றங் கூறினார்கள். அவ்வூரின் மக்கள் பெரும் புரட்சி பண்ணினார்கள். அப்போது லவன்-குசன் என்ற குழந்தைகள் இராமரோடு அரண்மனையில் தங்கியிருந்தபோது, சீதைக்குத் தம்குழந்தைகளின் சோகம் உண்டாகித் தம் பிள்ளைகளைப் பார்க்கும்பொருட்டு இராமனின் அரண்மனைக்குப் போய்க் குழந்தைகளைக் கண்டு மகிழ்ந்து அங்குத் தங்கினார். அப்போது சீதை ஒழுக்கங் கெட்டவள் எனக் குற்றஞ்சாட்டிச் சீதையை அவ்வரண்மனையின் நிலத்திலே உயிருடன் சமாதி செய்து அவரின் வாழ்நாளை முடிவுறச் செய்துள்ளார்கள். கொன்று புதைத்தார்களா? அல்லது உயிருடன் புதைத்தார்களா என்பது புரியவில்லை.

சீதையை இத்தகைய கொடுமை செய்யாமல் தம் பெற்ரோரின் இல்லத்திற்கு அனுபபியிருக்கலாம். சூர்ப்பனகையை மானபங்கஞ்செய்யாதிருந்தால், சீதையை இராவணாசுரன் மானபங்கம் செய்யாதிருக்கமாட்டார். கருப்பமும் உண்டாகியிராது. நிற்க இராமர் இலட்சுமணன் முதலிய குடும்பத்தார்களுக்குக் குலகுருவாகிய துர்வாசமுனிவர் சீதையை உயிருடன் புதைத்த கொடுமையைக் கேள்வியுற்றுவந்து, இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கன் என்பவர்கள் செய்த கொடுமையைக் கண்டித்து சபித்தார். துர்வாசரின் சாபத்தாலும் சீதையின் வதையாலும் முதலில் இலட்சுமணனும் பிறகு இராமனும் பரதனும், சத்துருக்கனும் ஆகியவர்கள்பயித்தியம்பிடித்து அயோத்தியாவுக்கு அருகாமையிலுள்ள சரயு ஆற்றிலே சில நாளுக்குள்போய் விழுந்து மூழ்கித் தற்கொலைசெய்து மடிந்தார்கள். இராமாயணமானது தந்தை சொல்படி நடந்தான் எனத் தொடங்கிச் சீதையைக் கொன்முன், தற்கொலை புரிந்து கொண்டான் என்ற முடிவுற்றது.

இராமன் அனுமார் முதலியவர்களைத் தெய்வம் எனக் கருதி வணங்கலாகாது, அவ்வாறு வணங்குவதால் எவ்வகைப் பயனுமில்லை. பலன் இல்லாத வணக்கத்தை விடுவது அறிவாம். பிறப்பும் இறப்பும் இல்லாத கடவுளையே வணங்குவது நற்பலன் உண்டாகும். கற்சிலை, வெண்கலச் சிலை, செப்புச்சிலை, மரச்சிலை, படச்சிலை முதலியவற்றைத் தெய்வம் எனக் கருதி வணங்குவது நாத்திமாம். அன்றியும் இத்தகைய வழிபாட்டில் முயற்சிப்பது பலனின்றி வாழ்நாள் வீணாகும் நிற்க,

★

திராவிடர்களைக் கெடுக்கும் மதம்.

புராணமதம்—பௌராணிக மதம்—இந்துமதம் என்பன ஒன்றே.

பௌராணிக இந்துமதம் ஆரியருக்கு (பார்ப்பனருக்கு) மதமாகும். இராமாயணத்திலுள்ள இராமனையும் பாரதத்தில் உள்ள கிருஷ்ணனையும் தெய்வமாகக்கொண்டது இந்துமதம். சிவமதம், சத்திமதம், முருகர் மதம் என்பன திராவிடத் தமிழரின் மதமாம். மனிதரை வணங்கும் மதம் நாத்திகமாகும். எல்லாம் படைத்துக் காத்து அருளுகின்ற கடவுளை வணங்குவது தெய்வ மதமாகும். நிற்க, புராணங்கள் வியாச முனிவரால் இயற்றப்படவில்லை. ஜெயதேவரின் சகோதரர் பூபாலதேவரால் இயற்றப்பட்டன. அன்றியும் வேறு சமஸ்கிருத பண்டிதர்களாலும் புராணங்கள் இயற்றப்பட்டன. இக்கருத்தை ஆரிய சமாஜம் தலைவர் சுவாமி தயானந்த சரஸ்வதி தனது சத்தியார்த்தப் பிரகாசம் என்ற நூலிலே கூறியுள்ளார். பௌராணிகப் போதனையால் பிற்காலத்தில் பல குழப்பங்கள் தோன்றின. சிவனுக்கு மனைவி பார்வதி, விஷ்ணுவுக்கு இலட்சுமி மனைவி, கணபதிக்கு வல்லபை மனைவி, முருகனுக்கு தெய்வயானை மனைவி, சிவனுக்கும் பார்வதிக்கும், கணபதி முருகன் புதல்வர்கள், மாலுக்குப் பார்வதி தங்கை என்ற முறை வைக்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட இந்துமதம் திராவிடர்களைத் தாழ்ந்தோராகவும் ஆரியரை உயர்ந்தோராகவும் செய்வதற்கு ஏற்பட்ட மதமாகும். அன்றியும் யானை, மாடு, நாய் (பைரவர்) பன்றி (கூர்மம்) பெருச்சாளி (மூழிகவாகனம்) கருடன் (கருட ஆழ்வார்) கல்சிலை. விக்கிரகம், படம், மரச்சிலை, வார்ப்புச்சிலை. முதலானவற்றைத் தெய்வம் எனக் கருதி வணங்குகிறார்கள். தெய்வம் அல்லாத வணக்கம் நாத்திக வணக்கமாம், பிறப்பும் இறப்பும் இல்லாத கடவுளை

வணங்குவது ஆத்திக வணக்கம். ஆதலால் திராவிடத் தமிழர்கள் நாத்திக வணக்கத்தை நீக்கி ஆத்திக வணக்கத்தைச் செய்து உய்வார்களாக

பௌராணிக இந்துமதத்தை யெதிர்த்தே சில ஆசார சீர்திருத்த மதங்கள் இந்தியாவில் தோன்றின.

தமிழ்நாட்டிலே பல ஆண்டிற்குமுன்னே பல சித்தர்கள் தோன்றிப் பல ஆசாரச் சீர்திருத்தக் கருத்துகள் கொண்ட பாடல் பல பாடினர்கள். சித்தர்களின் கொள்கையைப் பௌராணிகர்கள் எதிர்த்து அவற்றின் ஒளியை மழுக்கிவிட்டார்கள். இராமலிங்கசுவாமிகள் தாம் புகட்டிய சமரச சன்மார்க்க கொள்கை புகட்டியதால் தீட்சிதரால் மறைவுற்ருர். எங்கும் நிறைந்த பரம்பொருளை வணங்குவதே உண்மை வழிபாடாகும் என்று தாயுமானவசுவாமிகள் போதித்ததினல் புரோகிதர்கள் தீ வைத்தார்கள். நிற்க (வடநாட்டிலே பல அறிஞர்கள் பல ஆசார சீர்திருத்தமதங்களை இயற்றினர்கள். அவற்றுள் ஆரிய சமாஜம் என்பது சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களால் நிருவப்பட்டது. அது பாஞ்சாள நாட்டிலே நன்கு வளர்கின்றது. அம்மதம் வேத உபநிஷதங்களைப் புகட்டுகின்றது. புராண இதிகாசங்களைவெறுத்து மறுத்து கண்டிக்கின்றது.

ஜைனரும் புத்தரும் திராவிடர்களே

2300 ஆண்டிற்கு முன்னே கொலை, களவு, தீயபழக்க வழக்கங்கள், யாகக் கொடுமை முதலியன தோன்றி மனிதர்கள் அவற்ருல் மிகுந்த துன்பம் எய்திய போது கொல்லாமைக் கொள்கையுள்ள சமண மதமானது தீர்த்தங்கர முனிவரால் உண்டாக்கப்பட்டது. அஃதன்றி எண் வகை நன்னெறிகளையும் ஊட்டும் புத்த மதம் கி. மு. 600 ஆண்டிற்கு முன்னே சித்தார்த்த முனிவரால் போதிக்கப்பட்டது. அங்ஙனமே பலஸ்தீன நாட்டிலே பலவகை மூடக்கொள்கையால் மாந்தர்

துன்பம் எய்திய போது, அன்பைக் காட்டும் கிருஸ்துமதம் ஏசுநாதரால் போதிக்கப்பட்டது. கி. பி. சுமார் 600 ஆண்டிற்குப்பின்னே சகோதரத்துவத்தைப் புகட்டும் இஸ்லாம் மதம் முகம்மது நபியால் போதிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட மதங்களில் வகுப்பு வேற்றுமையில்லை, ஒரே கடவுளை வணங்கி வழிபடுகிறார்கள். ஒரே இனமாய் வாழ்கின்றார்கள். துன்பமும் மிகுந்த செலவுமுள்ள சடங்குகள் அவர்களுக்கில்லை. அம்மதத்தினர்க்குத் தம் நாட்டுப் பற்றும், மதப்பற்றும் உண்டு. உலகிலே மதத்தின் ஒற்றுமையுள்ள மக்கள் மேலான நிலைமையில் வாழ்கின்றார்கள். இக்கொள்கை உலகில் பல கலைஞர்கள் ஒப்புக்கொண்ட உண்மையாகும், நிற்க,

இந்தியா நாடு சுதந்திரம் பெறுவதற்கு இந்தியாவின் மக்கள் ஆற்றிய தியாகம்போல் பாகிஸ்தானியர் செய்திலர். அவர்கள் பெரும்பாலோர் ஆங்கிலேய அரசாங்கத்தோடு ஒத்துழைத்தவர்கள் டாக்டர் கான்சாகிபு, கான்அப்துல்காஃபர்-கான் என்பவர்களும் அவர்களின் குதைகித் மத்கார் சங்கத்தைச் சேர்ந்த செஞ்சட்டையினர் மட்டும் காங்கிரசோடு ஒத்துழைத்து அறிய தியாகஞ் செய்தனர். ஆயினும் மதத்தின் ஒற்றுமையால் முஸ்லீம் லீகர்கள் இந்தியாவின் கிழக்கிலும், மேற்கிலும் பாகிஸ்தான் என்னும் நாடுகளை அடைந்து ஆட்சி புரிகின்றார்கள். சங்க ஒற்றுமை, கழக ஒற்றுமை, மதம்-சமயத்தின் ஒற்றுமை மாந்தர்க்கு இன்றியமையாதனவாம்.

பிரம்ம சமாஜ் என்னும் மதம்

பிரம்ம சமாஜம் என்னும் மதம் இராஜாராம் மோகன் ராய் என்பவரால் நிறுவப்பட்டது. இயற்கைக் கடவுள் ஒரு

வரே உளர்; அவரையே வணங்குவதும், விக்கிரக வழிபாடு செய்யாமையோடு மறுப்பதும் ஆகிய கொள்கையுடையது. நிற்க,

பிரார்த்தனை சமாஜம்

பிரார்த்தனை சமாஜம் என்னும் மதம் சுவாமி சந்தாவர்க்கர் என்பவரால் நிறுவப்பட்டது. அது மகாராஷ்டிரத்தில் வழங்குகின்றது. அம்மதம் பௌராணிக மதத்தை மறுக்கின்றது.

தயாள் பாக் சமாஜம்

தயாள் பாக் சமாஜம் என்னும் மதம் மகான் இராதா சுவாமி என்பவரால் நிறுவப்பட்டது. அது ஆக்ரா (Agra) அருகாமையில் நடைபெறுகின்றது. இம்மதம் புராணமதத்தை மறுக்கிறது.

மேற் கூறப்பட்ட மதங்கள் ஆங்காங்கு மக்களுக்கு அரிய தொண்டு ஆற்றி மக்களைப் பௌராணிக மதத்தின் மூடக்கொள்கையினின்று மீட்டு உய்விக்கின்றன. மேற் கூறப்பட்ட சீர்திருத்த மதங்களைச்சேர்ந்தவர்கள் தாம் வாழ்க்கைக்குரிய எல்லாத்துறைகளிலும் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளனர். தென்னாட்டிலுள்ள பிரம்மஞான சங்கமும், சமரச சன்மார்க்கச் சங்கமும் மக்களைப் பௌராணிக மூடக் கொள்கையினின்று மீட்கவில்லை. தாயுமான முனிவரின் கொள்கையாவது எல்லா உலகங்களுக்கும் முழுமுதற்கடவுளாய் உள்ள ஒரு பரம்பொருளையே வழிபட்டு வணங்குவதாகும். அன்றியும், உருவம், படம், சிலை இலிங்கம், மரப்பாவை என்பவற்றை மறுப்பதாகும். திருவாளர் தாயுமான அடிகளார் தாம், என்சம்பந்தியான (வேதாரண்யம்) சர்தார் வேதரத்தினம் அவர்களுக்கு, ஐந்தாம் தலைமுறையின் மரபினராவர்.

. இந்திய நாட்டு மக்களுக்குச் சுய ராஜியம் கொடுக்க கூடாது என்று தமிழ் நாட்டிலும், அனைத்திந்தியாவிலும் உள்ள எல்லா மடங்களும் சைமன் கமிஷனிடம் வாக்கு மூலம் கொடுத்தன. பின்வருமாறு காண்க.

ஏறக்குறைய 1924 ஆண்டிலே (Simon commission)என்ற ஓர் ஆங்கிலேயர் கூட்டம், பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டது. இந்தியாவிற்கு எத்தகைய உரிமை (சுதந்திரம்) கொடுக்கத்தகும் என்பதை ஆராய்ந்து பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தெரிவிப்பது அதன் அலுவலாகும். அக்காலத்தில் அனைத்திந்தியா பேரவை (காங்கிரஸ்) சைமன்கமிஷனை நான் உள்படவும் மறியல் செய்துஅதனிடம் வாக்கு கொடுத்தற்கு மறுத்து எதிர்த்து ஒற்றுழையாமை செய்தது. இச்செயலை அறிந்தும், எல்லா இந்து மடங்களும் கூட்டங்கூட்டி ஆலோசனை செய்து, பின்வருமாறு தீர்மானஞ் செய்தனர் அதாவது இங்கிலாண்டிலிருந்து வந்திருக்கிற சைமன் கமிஷனோடு ஒத்துழைத்தல் வேண்டும் எனவும் ஒத்துழையாமை செய்தல் தகாது எனவும் தீர்மானஞ் செய்தனர். அத்தீர்மானத்திற் கேற்ப இந்து மடங்களின் பிரதிநிதிகள் போய் வாக்கு மூலங்கொடுத்தல் வேண்டும் எனத்தீர்மானஞ் செய்தனர். அதற்கேற்ப, சைவ மடங்கள், வைஷ்ணவ மடங்கள், வாணுமாமலை மடம், சங்கராச்சாரிமடம், மாத்துவாச்சாரி மடம் முதலான மடங்கள் தத்தந்தூதர்களை அனுப்பிச் சைமன் கமிஷனிடம் அவர்களின் கொள்கையை வாக்குமூலம் கொடுக்கச் செய்தனர், அவ்வாக்கு அளிப்பு வருமாறு:

இந்தியாவிற்குச் சுயராஜ்யம் கொடுக்க வேண்டாம். எப்போதும் போலப் பிரிட்டிஷாரே இந்தியாவை ஆளுதல் வேண்டும்.

இந்தியா மக்கள் சுயராஜியம் ஆளுவதற்குத்தகுதி இல்லாதவர்கள். சட்டமன்றத்திற்கு தேர்தல் வேண்டாம் பிரிட்டிஷ் அரசாங்கமே மக்களின் பிரதிநிதிகளை நியமித்துச் சட்டசபைக்கு அனுப்புவது நன்று. என்று வாக்கு மூலங் கொடுத்தனர். இந்தியா மக்கள் அரசியல் மதவியல் இரண்டிலும் அடிமையுற்றுச் சுதந்திரத்தோடு இனிய வாழ்க்கை வாழ்தல் கூடாது என்பது மேற் கூறப்பட்ட மடங்களின் கொள்கையாகும். இதனால் மேற்கூறப்பட்ட மடங்கள் நம் நாட்டு மக்களின் வாழ்க்கை நலத்திற்காக உழைப்பவை அல்ல என்பது புலனாகின்றது. அன்றியும் மக்களைத் தம் மதத்தில் சேர்க்கவும் இல்லை; அதற்கு முயற்சிக்கவும் இல்லை. தத்தம் மதம் உயர்வெனச் சொல்லிக்கொண்டு மக்களையே மாற்றுகிறார்கள். நிற்க,

காஷ்மீர் இந்தியாவோடு சுதந்தரம் அடைந்தபின்னர் காஷ்மீர மக்கள் (முஸ்லிம்கள்) பெரும்பாலோர் மீண்டும் இந்து மதத்தில் சேர்ந்து கொள்ளக் கேட்டபோது அவ் வேண்டுகோளைக் காசியிலுள்ள பெரிய மடமும் வேறு இந்து மடங்களும் மறுத்து விட்டன. இதனால் தெரிவது என்ன? இந்து மடங்கள் தாம் தத்தம் நன்மைகக்கு அல்லது மக்களின் நன்மைக்கு நடத்தப்படுவதில்லை என்பது புலனாகின்றது.

திராவிடத் தமிழர்களுக்கு வாழ்க்கைக்குத் தகுதியான உறுதிப் பொருள்கள்

இந்தியா நாட்டிலே வாழ்கின்ற மக்கள் அனைவர்க்கும் சிறப்பாகத் திராவிட மக்களுக்கு இன்றியமையாத உறுதிப் பொருள் இரண்டேஉள. அவற்றுள் ஒன்று நீதியுள்ள அரசாட்சியாகும். மற்றொன்று மக்களின் வர்ழ்க்கைக்குத் தகுதியான உயர்ந்த வாழ்க்கைக் கொள்கையாகும். அல்லது மேலான புதிய சமயக் கொள்கையாகும். நீதியுள்ள அரசாட்சி

யாவது பொருள் வளம், தொழில் வளம், வாணிப வளம், பயிர் வளம், நீர் வளம், நிலவளம், கலை வளம், போக்கு வரத்து வளம், மருந்து வளம், விஞ்ஞான வளம், ஏற்றுமதி இறக்குமதி வளம், கடல் வளம், நாட்டின் காப்பு வளம், செங்கோண்மை, தற்காப்பு வளம், அறநெறிக் காப்பு வளம் முதலியனவாம். மேற் கூறப்பட்ட வளம் பற்றி பாடங்களில் மாணவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும். மாணவர்களை அயல் நாட்டிற்கும் அனுப்பி விஞ்ஞானம் கற்பித்தல் வேண்டும். பகுத்தறிவு இல்லாத புராணக்கதைகளைக் கற்பிக் கலாகாது.

திராவிடத் தமிழர்களின் குடியரசு வாழ்க்கை

நீதியுள்ள குடியரசு என்பது நீதியுள்ள குடியரசின் மக்களால் ஏற்பட வேண்டும். ஆதலின் திராவிடத் தமிழர் ளின் வாழ்க்கையானது குடியரசிற்கு ஏற்ற வாழ்க்கை ஆளுதல் வேண்டும். துணைவன் துணைவி, குழந்தைகள் உடன் பிறந்தோர் உறவினர் முதலியோர் ஏற்றந்தாழ்வின்றிச் சம தரும நெறியில் வாழ்தல் வேண்டும். தொழில், வாணிகம், உத்தியோகம், அரசாங்கச் சேவை முதலியன நாணயமாக வும், நேர்மையாகவும் செய்தல் வேண்டும்.

திருடுதல், வஞ்சித்தல், பொய்த்தல் முதலியன செய் தல் கூடாது. பலவகைப்பட்ட மூட நம்பிக்கை மூடக் கொள் கை முதலியனவிடல் வேண்டும். நல்லொழுக்கம் மகிழ்ச்சி, முயற்சி, கவலையின்மை முதலியன செய்தல் வேண்டும். எல்லாம் படைத்துக்காத்து வருகின்ற பரங்கடவுளை வணங்கி உய்தல் வேண்டும். கல் சிலை, வார்ப்புச்சிலை, மரச்சிலை, படச்சிலை, ஓவியம் முதலிய கற்பனை உருவங்களைத் தெய்வம் எனக்கருதி வணங்கி வழிபடலாகாது.

அவற்றை வணங்குவது மறமாகும் (பாபமாகும்) மூட வணக்கமுமாகும். வாழ்க்கை நசித்துவிடும் ஆதலால அம் மூடக்கொள்கைகளை விட்டுவிடல் வேண்டும். அவ்வாறு விட்டுவிடுவது அறச்செயலாகும். ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்குமுன்னே அதாவது 4500 ஆண்டுக்கு முன்னே திராவிடத் தமிழர்கள் பிணங்களை எரிப்பதில்லை. புதைப்பது வழக்கம். அதன்மேல் மாடங்கட்டி மரியாதை செய்தார்கள். அதற்குப் பூசாரி, குருக்கள், புரோகிதர் முதலியோர் தோன்றிப் பணக் காணிக்கை வாங்கும் வணிக முறைக்கு மாறியது வருமானம் பெருகியதால் அவற்றின்மேல் பெரிய கோவில்களைக் கட்டித் திருவிழாக்கள் பெருக்கி மக்களைக் கவர்ந்து ஆண்டுகள்தோறும் பொதுமக்கள் கடன்பட்டாகிலும் நிறையப் பொருள் கொணடுவந்து அழிக்கும்படி விழாவினாலும் வேறு வகையாலும் பிரச்சாரம் செய்து மக்களைக் கவருகிறார்கள். ஆரியர் தொடக்கத்தில் பிணங்களைப் புதைத்தனர். இந்தியாவிற்கு வந்தபின்னரே பிணத்தை யெரித்தார்கள். புரோகிதர்களின் முயற்சியால் திராவிடத் தமிழர்களும் பிணங்களை எரித்தனர். இந்தியாவிலுள்ள பெரும்பாலான கோவில்களிலே பிணங்கள் புதைத்த சமாதி யாகவே இருக்கின்றன. ஆதலால் சிலைகளை வணங்குவது நாத்திகமாம். அதனை வணங்கற்க.

திராவிடத் தமிழர்கள் அவ்வக்காலங்களுக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்தல் வேண்டும்.

அவ்வக்காலங்களில் தோன்றும் புதிய நோய்களை அவ்வக்காலங்களில் தோன்றும் புதிய நோய்களை அவ்வக்காலங்களில் தோன்றும் மருந்துக்களால் தீர்ப்பது அறிவாகும். ஆதலால் பலவகை மூடக்கொள்கையைப் புகட்டும் பௌராணிகம் என்ற இந்து மதத்திலிருந்து வறுமை, வேற்றுமை, மடமை, சிறுமை முதலிய பல கெடுதலினின்று நீங்கி

உரிமை, உண்மை, தூய்மை, உய்ம்மை முதலிய நன்னெறிகளைப் புகட்டும் எம்மால் இயற்றப்பட்ட "திருவியன் மதியம்" என்னும் நூலிலே ஓதிய வண்ணம் வாழ்க்கை நடத்தி உய்வீர்களாக. அன்றியும் "திருவியன் மதியரின்" கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து உயர்ந்த மக்களாக இவ்வுலகில் வாழ்வீர்களாக.

நாம் செய்தற்குரிய அறச்செயல்கள்

1. வையகம் அனைத்தையும் படைத்துக் காத்து அருளுகின்ற பரம்பொருளாகிய இறைவர் ஒருவரையே வணங்கித் தொழுது உய்வோமாக.

2. உரிமை (சுதந்திரம்) ஒப்புமை (சமத்துவம்) உடன்மை (சகோதரத்துவம்) பல கலையறிவு, ஆராய்ச்சி, பகுத்தறிவு, பலவகைத் தொழிலறிவு, பலவகை வாணிப அறிவு, பொருளீட்டல் முதலியவற்றைப் புகட்டுவோம்.

3. அறம், மறம், இனியது, இன்னாது, நன்மை, தீமை முதலிய நெறிகளை யுள்ளவாறு விளக்கிக் காட்டி மக்களை நல்வழிப்படுத்துவோம்.

4. திருவிழா, திருமணம், மகப்பேறு, மரணம் முதலாய சடங்குகளைச் சிக்கனமாகவும், எளிய முறையிலும் நடத்துவோம்.

5. மாந்தர் அனைவரும் இறைவரின் புதல்வர் எனவும், இறைவரின் குடிமக்கள் எனவும் நாம் அனைவரும் ஓரினம் எனவும் புகட்டி ஒற்றுமைப்படுத்துவோம்.

6. நம் இந்திய குடியரசைத் திறம்பட ஆள நம் நாட்டார்க்கு உரிமைக் கொள்கையினைப் புகட்டுவோம்.

7. நம் நாட்டின்மீது பற்றுதலும், நம்நாட்டு மக்கள் மீது பற்றுதலும் உண்டாகும் வண்ணம் நம் நாட்டார்க்குப் புகட்டுவோம்.

8. மேற்கூறப்பட்ட கொள்கைகளுக்கு எதிரிடையான கொள்கைகளை யெதிர்த்து ஒழிப்பதைப் புகட்டுவோம். இவை முதலான கொள்கைகள் நம் திருவியன் மதியத்தின் கண்ணே திட்பநுட்பமாய்ப் புகட்டுவோம்.

மேற்கூறப்பட்ட எண்வகைக் கொள்கை என்பன இறைவர் திருவருள் கொண்டு அடியேனால் இயற்றப்பட்ட "திருவியன் மதியம்" என்னும் நூலிலே காணக்கிடக்கின்றன அந்நூலிலே நான்கு திருநெறிகள் உள,

1. அறத்துத் திருநெறிகள்.
2. வாழ்க்கைத் திருநெறிகள்.
3. நன்னியந் திருநெறிகள்.
4. மூண்மைத் திருநெறிகள்—என்பனவாம்.

அறத்துத் திருநெறியின் கண்ணே 9 பால்வகையுள. அவை அறிவின்பால், வாக்கியப்பால், தூய்மைப்பால், ஒழுக்கத்துப்பால், ஆராய்ச்சிப்பால், மகர்மைப்பால், (மக்கள் பால்) பொதுநலப்பால், அறத்துப்பால், கெழுதகைமைப்பால் என்பனவாம்.

அறிவின் பாவில் இயல்வகை (16) பதினாறு.

1. அறநெறியியல்:
2. அறியாமையியல்.
3. ஆராய்ச்சியியல்.
4. இயற்கையறிவியல்.
5. உள்ளத்தின் இயல்.
6 கேள்வியறிவியல்.

7. கோச்சியக்கலையியல்—அரசியல்.
8. பலகலையியல்.
9. பழக்கத்தியல்.
10. பொருட்கலையியல்.
11. திரங்கலையியல் (கப்பல்)
12. மதத்தின் அறிவியல்.
13. தொழிற்கலையியல்.
14. நாளணி நடக்கையியல்.
15. நுணுயக்கலையியல்—விஞ்ஞானம்.
16. வழக்கத்தியல்.

அறத்துத்திருநெறி—வாக்கியப்பாலில் இயல்வகை 5 ஐந்து

கயவாமையியல்
கரவு உரையாமையியல்
நலந்தருவாக்கியல்
பேருரையியல்
வாய்மையியல்

ஒழுக்கப்பால் இயல்வகை 23.

அவாவியல்
அவாவாமையியல்
அமைதியியல்
அழுக்காருமையியல்
ஆதரவு இயல்
இன்னா செய்யாமையியல்
ஊக்கத்தியல்
ஒழுங்கியல்
கருங்கூலிபெருமையியல் (இலஞ்சம்)
களவாமையியல்
சிக்கனத்தியல்

சூதாடாமையியல்
தருவன செய்கியல்
பிறர் நசையாமையியல்
புகழ்ச்சியியல்
பொறுமையியல்
பெற்ருேர் இயல்
பொதுவியல்—கலைநலம் வலியுறுத்துவது
போலிப்படிவத்தியல்.
நெறியாமையியல்
வெகுளாமையியல்
விரைவு இயல்
வறுமையியல்

தூய்மைப்பால் 4 இயல்வகையுள

உலகியல் தூய்மையியல்
உள்ளத்தின் தூய்மையியல்
புறத்தின் தூய்மையியல்
வினைத்தூய்மையியல்

ஆராய்ச்சிப்பால்—இயல்வகை 6

இயற்கையறிவியல்
கெடுசூழ்ச்சியறிகியல்
பயனியல்
முன்னேற்றத்தியல்
நம்பகத்தியல்

அறத்தின்திருநெறி—மகர்மைப்பால் இயல்வகை 11

அருள் இயல்
அன்பு இயல்
ஊராண்மையியல்

துங்கத்தியல்
மக்கள் இயல்
மதியாறையியல்
மதிவாணர் இயல்
மாந்தர்ப்பண்பியல்
மானத்தியல்
பேதியர் இயல்
விரத்தியல்

அறத்துத் திருநெறி — கெழுதகைமைப்பால் இயல் 6

உரிமையியல் (சுதந்தரத்துவம்)
உடன்மையியல் (சகோதரத்துவம்)
ஒப்புமையியல் (சமத்துவம்)
ஒற்றுமையியல்
நாட்டுப்பற்றியல்
வேற்றுமையியல்

அறதுத்திருநெறி —கொடையியல்பு

அறக்கொடையியல்
இன்னகொடையாகுமியல்
ஒற்றுமைக்கொடையியல்
தனிநலக்கொடையியல்
பொதுநலக் கொடையியல்
மறக்கொடையியல்
பலன்குறிக் கொடையியல்

வாழ்க்கைத்திருநெறி—கோச்சியப்பால் இயல்வகை 12
(அரசியல்)

அரசியல்
அமைச்சர் இயல்

ஆட்சியியல்
குடியரசு தலைவர் இயல்
குடிமக்கள் இயல்
குடும்பத் தண்டனையியல்
தலைவர் சடங்கியல்
நாட்டு அமைப்பியல்
நீதியியல்
பலகோச்சியத்தியல்
பொதுக்குற்றத்தண்டனையியல்
வன்மையியல்

வாழ்க்கைத் திருநெறி—காப்புப்பால் இயல் 3

காப்பு இயல்
தனித்தற்காப்பு இயல்
குழுவக் காப்பியல்

அறத்துத்திருநெறி—பொதுநலப்பால் இயல்வகை 3

கடமையியல்
தனிநலத்தியல்
விளக்கத்தியல்

வாழ்க்கைத்திருநெறி இயல்வகை 7

கோச்சியவியல்
காப்பு இயல்
குழுவத்து இயல்
தொழில் இயல்
பொருள் இயல்
வணிகத்தியல்
பொதுவியல்

வாழ்க்கைத்திருநெறி—தொழிற்பால் இயல்வகை 7

காப்புத் தொழில் இயல்
குடிசைத் தொழில் இயல்
தொழிலியல்
தொழும்பியல்
நெசவு இயல்
வானூர்தி இயல்
வேளாண்மையியல்

வாழ்க்கைத் திருநெறி—வணிகத்துப்பால் இயல்வகை 3

பண்டமாற்றியல்
வணிகத்து இயல்
வாணிபவியல்

வாழக்கைத்திருநெறி—பொருட்பால் இயல்வகை 5

பொருட்கடன் இயல்
பொருட்கு உரிமையியல்
பொதுவியல்
முன்னெச்சரிக்கையியல்
வினைசெயல் இயல்

நன்னியந்திருநெறி—பால்வகை 6

இல்லறப் பால்
உடலின் பால்
உள்ளத்தின் பால்
தூய்ப்புப் பால்
நலத்துப் பால்
பொதுவின் பால்

நன்னியந்திருநெறி—உடலப்பால் இயல்வகை 1

யாக்கையியல்

நன்னியந்திருநெறி—உள்ளத்துப்பால் இயல்வகை 3

உள்ளத்தின் உறுதியியல்
உள்ளத்தின் பண்பியல்
உள்ளத்தொருமையியல்

நன்னியந்திருநெறி—தூய்ப்புப்பால் இயல்வகை 4

உணவு இயல்
காற்று இயல்
நலத்தியல்
மயக்குன மிசையாமையியல்

நன்னியந்திருநெறி—இல்லறப்பால் இயல்வகை 23

இல்லறத்தியல்
அணிகலன் இயல்
ஆடுஉ மகடூஉ இயல்
ஆடையியல்
இல்லறவொழுக்கவியல்
இறைவர்க்கு நனறிகூறல் இயல்
இன்னிசையியல்
இறப்புச்சடங்கியல்
உண்ணல் சடங்கியல்
எச்சப்பேறு இயல்
களிப்பு இயல்
கடவுளை வணங்கிப்புறப்படுமியல்
தற்காப்பியல்
திருமணவியல்
திருமணச் சடங்கியல்

திருமணத் தலைவரியல்
நோய் நீக்கல் சடங்கியல்
திருமணப்பிரிவியல்
பெயரிடும் இயல்
மகப்பேறு இயல்
மனைப்புகல் இயல்
முதுமைக் களிப்பியல்
விருந்தளித்தோரை வாழ்த்தியல்
வினைத்துவக்கில் வேண்டுதல் இயல்

நன்னியந்திருநெறி—பொதுப்பால் இயல்வகை 3

ஐயுறுப்பு இயல்
ஒழிபியல்
பெயரியல்

மூண்மைத்திருநெறி—பால்வகை 6

இயற்கியப் பால்
உயிரின் பால்
கடவுட் பால்
தொழுகைப் பால்
தண்டனைப் பால்
வீட்டுப்பால்

கடவுட்பால்—இயல்வகை 6

அழிபு இயல்
இறையின்றியமையாதியல்
கடவுள் இயல்
கடவுள் காப்பியல்
திருச்செயல் இயல்
படைப்பியல்

உசிரத்துப்பால்—இயல்வகை 4

உயிர் இயல்
உயிரின் கடமையியல்
உயிர்ப் பலனியல்
ஊழ்ப்பலனியல்

மூண்மைத்திருநெறி—இயற்கியப்பால் இயல்வகை 3

காலத்தியல்
இயற்கையாக்கவியல்
இயற்கையியல்

மூண்மைத்திருநெறி—தொழுகைப்பால் இயல்வகை 12

எண்வகைப்பெற்றி நிலைக்குமாறு மன்றுடுதல்
திருக்கோவிலியல்
திருமேனியியல்
திருவிழாவியல்
தொழுகைப்பயன் இயல்
மகளிர் திருவிழாப்போது ஓதுங்கடவுள் வணக்கம்
மழைபெய்ய வேண்டுதல் இயல்
மழை நிற்க வேண்டுதல் இயல்
நம்நாட்டின் தொழிலை வாழ்த்துதல்
உம்நாட்டை வாழ்த்துதல்
மெய்ந்நிலை வணக்கம்
வணக்க வேளையியல்

மூண்மைத்திருநெறி—வீட்டுப்பால் இயல்வகை 9

அறக்கடன் இயல்
ஒட்டியங்கூடாதியல் (மந்திரம்)
துறக்கத்தியல்

நீரால் தீவினை நீங்காதியல்
மதியம் புகலியல்
மறத்தியல்
துறக்கப்பிறவியியல்
வீட்டியல்
துறக்கத்திற்குரிய பிறவியியல்

மூண்மைத்திருநெறி—தண்டனைப்பால் இயல்வகை 4

குழுவின் தண்டனையியல்
கோச்சியத் தண்டனையியல்
கொடுமையைத் திட்புதல் இயல் (சபித்தல்)
தெய்வத்தண்டனையியல்

மேற்கூறப்பட்ட திருநெறிகள் நான்கிலும் மக்கள் வாழ்க்கைக்குரிய கொள்கையனைத்தும் அடங்கியுள்ளன. நடு கடலிலே செல்லுங் கப்பலுக்குத் திசையைக்காட்டுஞ் ''திசைக்கருவி''போல் வாழ்க்கைக் கடலிலே உய்யும் வழி யறியாமல் துன்பம் எய்தித் திகைக்கும் மாந்தர்க்கு நமது ''திருவியன்மதியம்'' என்னும் பனுவல் ஓர் வழிகாட்டுங் கருவியாகவும் கலங்கரை விளக்கமாகவும் திகழ்கின்றது அமைந்திருக்கின்றது.

★

அறிவிப்பு

திருவியன் மதியம் என்னும் நூலைப்பெற விரும்புவோர் அடியிற்கண்ட முகவரிக்கு எழுதினுல் அஞ்சலில் (தபாலில்) **V. P.**யில் அனுப்பப்படும். அதன் விலை ரூபாய் **3** (மூன்று) அஞ்சல் செலவு தனி. தென்னுடு, வடநாடு முதலிய நாடுகளில் திருவியன் மதியத்தின் திருநெறிக் கொள்கைகளைப் புகட்டிப் பரவச்செய்யும் பொருட்டுப் பின்னர் பல அறிஞர்களால் தொண்டு ஆற்றப்படும்.

வாழிய வாழி திருவியன்மதியர்கள்.

அஞ்சல் முகவரி வருமாறு :-

வெ. துரையனுர் அடிகள்

The National Industrial Works & Iron foundry,

Post Box 17

இந்திய மெஷனரி ஸ்டோர்

India Machinery Stores,

Post Box 6, Kumbakonam.

★